ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

10.01.2018 - மலர் 14, இதழ் 46




ட்ரோன் விமானத்தில் பீட்சா டெலிவரி






## கடற்றொழிற்றுறை நடைபெறும் விதங்கள்

பருவவெளியீட்டுப் பகுதி
யாழ்ப்பாண பொது நூலகம்

உடவலவ யானைகள் சரணாலயம்




வெள்ளிக்கு செல்லவுள்ள ரொபோ விமானம்



விலை ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சூரியனிலிருந்து இரண்டாவதாக அமைந்துள்ள கிரகம்தான் வெள்ளி. சூரியனிலிருந்து வெள்ளிக்கு உள்ள தூரம் 108,200,000 கி.மீற்றர் ஆகும். வெள்ளியில் ஒரு நாள் என்பது புவி நாள் கணக்கில் 116 நாட்கள். இக்கிரகம் சூரியனை சுற்றிவர எடுக்கும் காலம் (புவி நாட்களின்படி) 225 நாட்கள் ஆகும். எமது சூரியத் தொகுதிக்குரிய கிரகங்களில் அதிக உயரம் கொண்ட மலை வெள்ளிக் கிரகத்திலேயே காணப்படுகின்றது. இந்த மலை 'மெக்ஸ்வெல் மொன்டேஸ்' என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. இது தவிர, செயல் நிலையில் உள்ள எரிமலைகள் பலவும் நிறைந்த கிரகமாகவும் வெள்ளி திகழ்கின்றது.



# வெள்ளிக்கு செல்லவுள்ள ரோபோ விமானம்

## ரோபோ விமானம்

அமெரிக்க தனியார் தொழில்நுட்ப மற்றும் பொறியியல் நிறுவனமொன்று வெள்ளிக் கிரகத்தில் ஆய்வுக்கென விமானம் ஒன்றினை தயாரித்து அனுப்பவுள்ளது. நாஸா நிறுவனத்துடன் இணைந்து இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது. இந்த ரொபோ விமானம் 2021ஆம் ஆண்டளவில் வெள்ளியின் வளிமண்டலத்திற்குள் பிரவேசிக்கவுள்ளது. இதற்கென, நாஸா நிறுவனம் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கவுள்ளது.

இந்த ரொபோ விமானத்திற்கு 'Vamp' (Venus Atmospheric Maneuverable Platform) என்று பெயரிடப்பட்டுள்ளது. போயிங் 737 பயணிகள் விமானத்தைவிட இந்த விமானம் இரண்டு மடங்கு பெரியதாகும். இதன் அதிகபட்ச வேகம் மணித்தியாலத்திற்கு 220 கி.மீற்றராக காணப்படுகின்றது.




## வெள்ளியில் எரிமலைகள்

சுமார் ஒரு பில்லியன் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் வெள்ளிக் கிரகம் ஏராளமான எரிமலைகளால் நிரம்பியிருந்ததாகவும், இவை அனைத்தும் ஒன்றிணைந்து ஒரே நேரத்தில் வெடித்து சிதறியதாகவும், இவற்றிலிருந்து எரிமலைக் குழம்புகள் வெளியாகியதாகவும் கூறப்படுகின்றது. இந்த எரிமலைகள் தற்போதும் செயல் நிலையில் உள்ளதாக ஐரோப்பிய விண்வெளி நிலையத்தின் விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர். ஐரோப்பிய விண்வெளி நிலையத்தினால் வெள்ளிக் கிரகத்தின் சுற்றுப்பாதைக்கு அனுப்பி வைக்கப்பட்ட 'வீனஸ் எக்ஸ்பிரஸ்' என்ற ரொபோ ஆய்வு விமானத்தின் மூலம் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையிலேயே இந்த விபரங்கள் தெரியவந்துள்ளன.



## முற்றிலும் வேறுபட்ட வளிமண்டலம்

வெள்ளியும் பூமியும் அளவில் ஒரே தன்மை கொண்ட கிரகங்களாக இருந்தாலும், இவற்றின் வளிமண்டலங்கள் முற்றிலும் மாறுபட்டவையாகும். வெள்ளியின் வளிமண்டலம் நச்சுத் தன்மை வாய்ந்த காபன் டயொக்சைட் வாயுவினால் நிரம்பியுள்ளது. முகில்களில் சல்ஃபியூரிக் அமிலம் காணப்படுகின்றது. வளிமண்டலம் அடர்த்தியான



தன்மை கொண்டது. வெள்ளிக் கிரகத்தின் உள்ளகத்தில் நிக்கல், இரும்பு என்பன அடங்கியுள்ளன.

## ஆய்வுப் பொருட்களை எடுத்துச் செல்லல்

இங்கு ஆய்வுகளை செய்யவுள்ள ரொபோ விமானமானது ஆய்வுக்கருவிகள் உட்பட, 200 கிலோகிராம் எடையினை சுமந்து செல்லக்கூடிய ஆற்றலை கொண்டதாகும். இதில் கெமரா, வளிமண்டல ஆய்வுக் கருவிகள், மாதிரிகளை சேகரிக்கும் கருவிகள் என்பனவும் அடங்கும். குறித்த ரொபோ விமானம் வெள்ளியின் வளிமண்டலத்திற்குள் பிரவேசித்ததை அடுத்து, அது வெள்ளியின் மேற்பரப்பிலிருந்து 50 கி.மீற்றர் அல்லது 70 கி.மீற்றர் உயரத்தில் பறக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீனத்துவத்தை மட்டுமன்றி வாசிப்பையும் நேசியுங்கள்




மாணவமணிகளாகிய நீங்கள் பிறந்துள்ள புதுவருடத்தில் புதிய வகுப்பில் இருப்பீர்கள். புதிய பாடப்புத்தகங்கள், புதிய கால அட்டவணை என புதுத்தெம்புடன் இருப்பீர்கள். விருப்புடன் கற்றல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதானது, வருட இறுதியில் நல்ல பெறுபேறுகளுக்கு வித்திடுவதாக அமையும். அந்தவகையில், உங்களுடைய இந்த ஆரம்பம் குதூகலம், தெம்பு தொடர்வதாக அமையட்டும்.

இன்றைய உலகம் நவீனத்தை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றது. கற்றலிலும் இந்த நவீனம் கலந்து வருகின்றது. எனவே, நவீனத்திற்குள் நுழைய வேண்டிய தேவை மாணவ சமூகத்திற்கும் உள்ளது. தொழில்நுட்ப ரீதியிலான மாற்றங்களே, இன்று அதிகளவில் நவீனத்தின் அடையாளமாகத் திகழ்கின்றன. எனினும், நவீன தொழில்நுட்பம் என்பதற்காக, எல்லாவற்றையுமே அரவணைக்க வேண்டும் என்ற கட்டாயம் கிடையாது. தொழில்நுட்பத்தின் பெயரால் வாழ்க்கைக்கு ஒவ்வாத சிலவும் சமூகத்தை ஆட்டிப் படைக்கின்றது. எனவே, இவற்றை சரிவர இனங்கண்டு கற்றலுக்கும் வாழ்க்கைக்கும் கைகொடுக்கும் நவீனத்துவத்தை பின்பற்ற முனையுங்கள்.

இன்றைய நவீன உலகம் தொலைக்காட்சி, கணினி, இணையம் போன்றவற்றினால் கட்டிப்போடப்பட்டுள்ளது. இதில் மூழ்கியுள்ள மாணவ சமூகத்தில் அநேகரிடம் வாசிப்பு ஆர்வம் குறைந்திருப்பதை அறிய முடிகின்றது. பாடப்புத்தகங்களில் கற்பவை பரீட்சையில் சித்திபெற வழிகாட்டுவது போலவே, வாசிப்பில் பெறும் பயனானது வாழ்க்கை முழுமை பெறுவதற்கும் வெற்றி பெறுவதற்கும் துணையாகின்றது.

கற்றல் திறன் உங்கள் அறிவுத்திறனை வெளிப்படுத்தும். வாசிப்புத் திறன் உங்கள் ஆளுமைத் திறனை வெளிப்படுத்தும். அறிவும் ஆளுமையும் ஒன்றிணையும்போதே மனிதனால் இன்றைய நவீன உலகத்தில் சவால்களுக்கு முகம்கொடுக்கக்கூடியதாக இருக்கும். நல்லவற்றை வாசிக்கும்போது நமது பேச்சு, செயல், நடத்தை, புரிந்துணர்வு அனைத்தும் சீரானதாக அமையும். வாழ்க்கை எனும் பரீட்சையில் அதுவே சித்திபெற வழிவகுக்கும்.

வெறுமனே, தொழில்நுட்பத்திற்குள் மாத்திரமே சிறைப்பட்டு ஒரே இடத்தில் இருந்துகொண்டே சிந்தனையை துருப்பிடிக் கச் செய்யாமல் வாசிப்பின்மூலம் நான்கும் தெரிந்த முழு மனிதனாவோம். எனவே, வாசிப்பின்மூலம் சிந்தைக்கு நல்ல பயிற்சியை வழங்குவோம். அதுவே நமது உயர்ச்சியாக அமையும். பிறந்துள்ள வருடம் மகிழ்ச்சிகரமாக அமையட்டும். வாழ்த்துக்கள்.

ஆசிரியர்,
வி.ரெட்லி ஹெறிசன்

விஜய்
த.பெ.எண் 2037,
கொழும்பு.
தொலைபேசி 2479653
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652

# பொலித்தீன் பாவனைத் தடை இறுக்கமாக்கப்படுகின்றது...!



உக்காத தன்மை கொண்ட பொலித்தீன் மற்றும் லன்ச்ஷீட் பாவனைக்கான தடை ஜனவரி 01ஆம் திகதி தொடக்கம் கடுமையாக அமுல்படுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே கடந்த வருடம் ஓகஸ்ட் மாதமே இதற்கான தடையை அரசாங்கம் விதித்திருந்தது. இருப்பினும் இதற்கான மாற்று வழிகளை கண்டறிவதற்காக கால அவகாசம் கோரப்பட்டமையினால் இச்சட்டத்தை இறுக்கமாகக் கடைப்பிடிப்பதற்கு 2018 ஜனவரி வரை அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கமையவே, ஜனவரி தொடக்கம் இச்சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட்டுள்ளது. உக்கிப் போகக்கூடிய பொலித்தீன்கள் தற்போது பாவனைக்கு விடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கையில் ஆயுட்காலம் 35 ஆக குறையும் ஆபத்து...?



இலங்கையில் எதிர்கால தலைமுறையினரின் ஆயுட்காலம் 35 வயதாக அமையக்கூடிய ஆபத்துக்கள் இருப்பதாக இலங்கையின் விசேட மருத்துவ நிபுணர் அனுருத்த பாதெனிய எச்சரிக்கை செய்துள்ளார்.

உலக நீரிழிவு சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றின்மூலமே இந்த உண்மை தெரியவந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கையின் வளர்ந்து வரும் தலைமுறையினரில் பலர் தொற்றாநோய்கள் பலவற்றிற்கு ஆளாகி வருவதாகவும் குறிப்பாக இன்றைய இளம் பருவத்தினரின் வாழ்க்கை முறையில் ஏற்பட்டுள்ள மாற்றத்தின் காரணமாக, மனித உடலிற்கு தீங்காக அமையக்கூடிய இரசாயனக் கலவைகள் அடங்கிய உணவு, பானங்களை உட்கொள்வதே இதற்கான பிரதான காரணியாக அமைந்திருப்பதாகவும் மருத்துவர் அனுருத்த பாதெனிய மேலும் தெரிவித்துள்ளார்.

# தரம்-1 அனுமதி ஜனவரி 15 இல்...



2018 ஆம் ஆண்டுக்குரிய தரம் 1 இற்கான புதிய மாணவர்களை அனுமதித்தல் ஜனவரி 15 ஆம் திகதி வைபவரீதியாக இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஆலோசனைகள் பாடசாலை அதிபர்மாருக்கு வழங்கப்பட்டிருப்பதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. இதற்கமைய, தரம் 1 இல் ஒரு வகுப்பில் 38 மாணவர்களே சேர்க்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தரம் 1 இற்கு மாணவர்களை அனுமதிக்கும் உத்தியோகபூர்வ வைபவம் கொழும்பு இஸிபத்தன கல்லூரியில் நடைபெறவுள்ளதுடன், இந்நிகழ்வில் கல்வித்துறை அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் பிரதம அதிதியாக கலந்துகொள்ளவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேது நாட்டு மன்னனின் அரச சபைக்குக் கவிராஜகேசரி என்ற பண்டிதர் ஒருவர் வந்தார். வேறெந்தப் பண்டிதராலும் அவரைப் போட்டியில் வெல்ல முடியவில்லை.

அப்போது ஆஸ்தான விகடகவி கவிராஜ் கேசரியிடம், 'பண்டிதரே! நான் உங்களிடம் சேர்ந்தாற்போல ஐந்து கேள்விகள் கேட்பேன். நீங்கள் அந்த ஐந்து கேள்விகளுக்கும் சரியான விடை கூறாமல் தவறான விடைகளையே கூற வேண்டும். அப்படிச் சொன்னால் நீங்கள் என்னை வென்றவர் ஆவீர். ஒரு கேள்விக்குச் சரியான விடை சொன்னாலும் நீங்கள் தோற்றவர் ஆவீர்!'' என்றார்.

கவிராஜ்கேசரியும் அதற்கு இணங்கினார். விகடகவி, ''நீங்கள் அயல் நாட்டவரா?'' என்று கேட்க, ''இல்லை நான் இந்நாட்டவன்'' என்றார் கவிராஜ் கேசரி. ''இப்போது நீங்கள் உங்களுடைய நாட்டில்தான் இருக்கிறீர்களா?'' என விகடகவி கேட்க, ''ஆமாம் என்றார் பண்டிதர். ''உங்கள் நாட்டு மன்னன் பெயர் மார்த்தாண்டரா?'' என்று



# இதுவும் ஒரு கேள்வியே

மூன்றாவது கேள்வியைக் கேட்டார் விகடகவி. ''இல்லை'' என்றார் பண்டிதர். பின்னர் விகடகவி மறந்தவர் போல நடித்து ''நான் எவ்வளவு கேள்விகள் கேட்டேன்?'' என்றார். ''இதுவரை மூன்று கேள்விகள் கேட்டீர்கள். இன்னும் இரண்டு கேள்விகள் கேட்க வேண்டும்'' என்றார் பண்டிதர்.

சட்டென்று விகடகவி, ''நான் இப்போது கேட்டது நான் குறிப்பிட்ட ஐந்து கேள்விகளில் ஒரு கேள்வியே. அதற்கு நீங்கள் சரியான விடையைக் கூறித் தோற்றுப்போனீர்கள்'' என்றார் சிரித்தவாறு. வேறு வழி இல்லாமல் தன் தோல்வியை ஒப்புக்கொண்டார் கவிராஜ்கேசரி.



# அம்மாவிடம் மாட்டிய நரி

ஒரு காட்டின் எல்லையில் இருந்த கிராமத்தில் வசித்து வந்தாள் குறும்புக்கார பானு. சாப்பிட, குளிக்க, விளையாட என்று எல்லாவற்றுக்கும் பிடிவாதம் பிடிப்பாள்.

அன்று இரவு பானுவுக்குச் சோறு ஊட்ட ஆரம்பித்தார் அம்மா. வழக்கம்போல் சாப்பிட மாட்டேன் என்று அவள் அடம்பிடித்தாள்.

''பானு, சாப்பிட்டால்தான் அம்மா மாதிரி பெரிய ஆளாக வளரலாம்''

''ம்ஹும் எனக்குச் சாப்பாடு வேண்டாம்''

''சாப்பிடாவிட்டால் உன்னை நரி கிட்ட பிடிச்சுக் கொடுத்துடுவேன்'' என்று அம்மா மிரட்டிக் கொண்டிருக்கும்போது, அந்த வழியே நரி ஒன்று வந்தது. 'ஆஹா! எத்தனை நாட்கள்தான் நண்டுகளைச் சாப்பிடறது? இன்னிக்கு நல்ல விருந்து!' என்று மகிழ்ச்சியடைந்தது நரி.

எப்படியாவது குழந்தையைக் கொடுத்து விடுவார்கள் என்று இரவு முழுவதும் காத்திருந்து ஏமாற்றமடைந்த நரி, மறுநாள் பார்த்துக்கொள்ளலாம் என்று காட்டை நோக்கி ஓடிவிட்டது.

மறுநாள் குளிக்க அடம்பிடித்துக் கொண்டிருந்தாள் பானு. ''குளிக்க வராவிட்டால் உன்னை பூதத்திடம் பிடித்துக் கொடுத்துடுவேன்!'' என்று அம்மா சொல்வதை மரத்தில் இருந்த பூதம் ஒன்று கேட்டுக் கொண்டிருந்தது.

'அடடா! இன்று நல்ல விருந்து!' என்று பூதம் நினைத்துக்கொண்டிருந்தது.

அன்று இரவு வீட்டுக் கதவைத் தட்டியது நரி. ஜன்னல் வழியே எட்டிப் பார்த்த பானுவின் அம்மா திடுக்கிட்டார்.

''என்ன அம்மா, சொல்றீங்களே தவிர செய்ய மாட்டேங்கிறீங்க... நான் எவ்வளவு நேரம் காத்துக்கிட்டு இருக்கிறது? குழந்தையைக் கொடுங்க'' என்று கேட்டது நரி.

பானுவின் அம்மாவுக்குப் பயம் வந்துவிட்டது. 'குழந்தையை மிரட்ட விளையாட்டுக்குச் சொன்னால் நரி வந்து நிற்கும் என்று நான் நினைக்கவில்லையே!' என்று பதறினாலும் சமாளிக்க முடிவு செய்தார்.


''நரியாரே, அஞ்சு நிமிடம் கழிச்சு பின்னால உள்ள வயலுக்கு வாங்க. நீங்க கேட்டதைக் கொடுத்துடறேன்'' என்று கூறிவிட்டு, பானுவின் அம்மா ஒரு பையில் கற்களை அடைத்து வயலில் அதனை தூக்கி எறிந்து விட்டு பானுவை கிள்ளிவிட்டார்.

அழுகைச் சத்தம் கேட்டவுடன் நரியும் ஆவலோடு வயலுக்குள் பாய்ந்து வந்தது.

அந்த வயலுக்குச் சொந்தக்காரர் இரவில் விலங்குகள் வந்து பயிர்களைப் பாழ்படுத்தாமல் இருப்பதற்காகக் குழி தோண்டிப் பொறி வைத்திருந்தார். அந்தப் பொறியில் நரி வசமாகச் சிக்கிக் கொண்டது. 'அப்பாடா!' என்று பெருமூச்சு விட்டார் பானுவின் அம்மா. எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்த பூதம், நரியைப்போல நான் ஏமாறக் கூடாது என்று நினைத்துக்கொண்டு தப்பித்தோம் பிழைத்தோம் என்று அங்கிருந்து ஓட்டம் பிடித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்நன்றியை நினைவு கூரும் தைப்பொங்கல் திருநாள்



உழவர்கள் தங்களது உழைப்பிற்கு உதவிய இயற்கைக்கும் குறிப்பாக சூரிய பகவானுக்கும் தம்மோடு இணைந்து விளைச்சலுக்குப் பெரும் பங்காற்றிய கால்நடைகளுக்கும் நன்றி தெரிவிக்கும் திருநாளாக தைப்பொங்கல் திருநாள் வருடம் தோறும் அனைத்து தமிழ் மக்களாலும் உழவர்களாலும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. இத்தினத்தை 'தைத்திருநாள்' என்றும் அழைப்பர். இத்திருநாள் தமிழர் நாட்காட்டியில் தை மாதம் முதலாம் திகதியும் ஆங்கில நாட்காட்டியின்படி எதிர்வரும் 14 ஆம் திகதியன்றும் கொண்டாடப்படுகின்றது.

இந்நன்னாள் வெறுமனே ஒரு பொங்கல் விழாவாகக் கொண்டாடப்படாமல் உழவர் பெருமக்களின் பயிர் செய்கைகளும் மக்களுடைய இன்பங்கள் அனைத்தும் இவ்வாண்டு முழுவதும் பால் பொங்கி வருவதுபோல் பல்கிப் பெருகி பொங்கி வரவேண்டும் எனும் கொள்கைக்கு அமையவே கொண்டாடப்படுகின்றது. உழவர்கள் பெரும்பாலும் ஆடி மாதத்தில்தான் பயிர் விதைகளை விதைப்பார்கள். அன்றிலிருந்து மார்கழி மாதம் வரை உழவர்கள் அப்பயிர் விதைகளுக்கேற்ற நீர், உரங்களை இட்டு வளர்க்கின்றார்கள். மார்கழி மாதத்தில் அறுவடை மேற்கொள்ளுகின்றார்கள். அதுவரை தங்கள் பயிருக்கு வெப்பத்தை வழங்கி தங்கள் அறுவடையை செழிக்கச் செய்த சூரியனுக்கு நன்றி தெரிவிக்கவே இத்தைத்திருநாளை உலகமெங்கும் வாழும் தமிழ் மக்கள் கொண்டாடுகின்றனர்.

## தைத்திருநாள் நிகழ்வுகள்

அதிகாலையில் இல்லத்தில் அனைவரும் துயில் விட்டு எழுந்து, நீராடி புத்தாடை புனைவர். இல்லத்தின் முற்றத்தில் அரிசி மாக் கோலமிட்டு, வாசலில் மாவிலை தோரணத்தாலும் கரும்பினாலும் அலங்கரிப்பர். குடும்பத் தலைவன் சூரியன் உதிக்கும் திசை நோக்கி புது அடுப்பில் திரு நீறு, சந்தனம், குங்குமம் பூசி, பச்சை மஞ்சள் கட்டிய புதிய பானையில் பால் நிரப்பி அடுப்பில் வைப்பார். பால் பொங்கி வரும்போது, குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் பச்சரிசியை 'பொங்கலோ பொங்கல்' எனக் கூறிக்கொண்டே அதில் இடுவர். பொங்கல் தயாரானதும் முதலில் சூரிய பகவானுக்கு குடும்பத் தலைவர் தீபம் காட்டி அதனை படைப்பார். சிறுவர்கள் பட்டாசுகளை வெடிக்கச் செய்வர். அத்தோடு, இல்லத்தின் பூஜை அறையிலும் பொங்கல் வைத்து பூஜை செய்த பின்னர் குடும்ப அங்கத்தவர் அனைவரும் பொங்கலைப் பகிர்ந்துண்டு மகிழ்வர். அவ்வாறே, அயலவர்களுக்கும் தைத்திருநாள் வாழ்த்துக்களை தெரிவித்து, பொங்கலைப் பங்கிட்டு மகிழ்வர். ஆலயங்களுக்கு சென்று இறை வழிபாட்டையும் மேற்கொள்வர்.





## மாட்டுப் பொங்கல்


தங்களது உழவுத் தொழிலுக்கு உதவி புரிந்த காளைகளுக்கு தமது நன்றி உணர்வை வெளிப்படுத்தவே தைப்பொங்கலுக்கு மறுநாள் 'மாட்டுப் பொங்கல்' கொண்டாடப்படுகின்றது. இந்த பொங்கல் தினத்தை பெரும்பாலும் உழவர் மட்டுமே கொண்டாடுகின்றனர். மாட்டுத் தொழுவத்தை சுத்தம் செய்து, மாடுகளைக் குளிப்பாட்டி அலங்கரித்து பின்னர் மாட்டுதொழுவத்தில் கோலமிட்டு பொங்கல் வைப்பர். அந்தப் பொங்கலுடன் பழங்களையும் மாட்டிற்கு உண்ணக் கொடுத்து அவற்றுக்கு தமது நன்றியைத் தெரிவித்து மகிழ்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலுடன் போராடு

கரையோரப் பகுதிகளில் வாழும் மக்கள் தமது வாழ்வாதாரத்திற்கு தேவையானவற்றை கரையோரப் பகுதிகளிலேயே பெற்றுக் கொள்கின்றனர். அவ்வாறு பெறப்படும் வளங்களில் மீன் வளம் பிரதான இடத்தினைப் பெறுகின்றது. மீன்பிடித் தொழிலை பிரதானமாகக் கொண்டுள்ள இந்த மக்கள் காலை, மாலை, இரவு என்று பாராமல் கடலுடன் போராடி அன்றாட சீவனோபாயத்தினைப் பெற்றுக் கொள்கின்றனர்.



## வளம்

இலங்கையின் மக்கள் சனத்தொகையில் 5 சதவீதமானவர்களின் வாழ்வாதாரமாக மீன் பிடித் தொழில் காணப்படுகின்றது. இதனால் நமது நாட்டில் வாழும் பெரும்பாலான மக்களின் பெரும் வளமாக கரையோரப் பகுதி காணப்படுகின்றது. அந்தவகையில், கடல் சார் மீன்பிடித் தொழிற்றுறை பிரதானமாக 3 பகுதிகளைக் கொண்டுள்ளது. அவை வருமாறு:

★ **கரையோர மீன் பிடித் தொழில்**
★ **சவர் நீர் மீன் பிடித் தொழில்**
★ **உவர்நீர் மீன் பிடித் தொழில்**









ஐஸ் பெட்டி



பெரிய வலை



## கரையோர மீன் பிடித் தொழிற்றுறை

கடலின் பொதுவான ஆழம் 200 மீற்றர் கொண்டதும் கரையோரத்திற்கு அப்பால் முதல் ஒரு சில மீற்றர்களுக்குள் அமைந்துள்ளதுமான பெருங்கண்ட தடாகப் பகுதியிலேயே கரையோர மீன்பிடித் தொழிற்றுறை மேற்கொள்ளப்படுகின்றது. இங்குள்ள மக்கள் பெரும்பாலும் கரையோர மீன்பிடி தொழிற்றுறையிலேயே தங்கியுள்ளனர்.

கரையோர கடலின் மூலம் பெறப்படும் மீன்களாக சாலயா, சூடை, உருல்லா, ரன்னா, நெத்தலி, கொஸ்ஸா, இறால் ஆகியவற்றை குறிப்பிட முடியும். இதில் பயன்படுத்தப்படும் பிரதான கருவிகளாக பெரும் வலைகள், சிறிய துளை கொண்ட வலைகள் பயன்படுத்தப்படுகின்றன.

ஆழமற்ற கடற்பரப்பில் நிறுவப்படும் சிறு தூண்களில் அமர்ந்து கொண்டும் மீன் பிடிக்கப்படுகின்றது. இவ்வாறு மீன்களைப் பிடித்தல் இலங்கைக்கு மட்டுமே உரித்தான முறையாகும். தென் பகுதியின் அஹங்கம, மிரிஸ்ஸ ஆகிய பகுதிகளில் பரவலாக இந்த முறை வியாபித்துள்ளது.

## சவர்நீர் மீன்பிடி தொழிற்றுறை

சவர்நீர் மீன்பிடித் தொழிலினை களப்பு, சங்கமம், கண்டல் சதுப்பு, உப்பு சதுப்பு ஆகிய இடங்களில் காண முடியும். இறால்கள், நண்டுகள் மற்றும் அழகிய மீன்கள் என்பனவற்றை இங்கு பரவலாகக் காண முடியும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன் பிடித் தொழிற்றுறை

## உவர் நீர் மீன்பிடித் தொழில்

தொலைதூரப் பகுதி கரையோர மீன்பிடி தொழிற்றுறையாகக் கருதப்படுகின்றது. கரையோரப் பகுதிக்கு அப்பால் ஆரம்ப சில கிலோ மீற்றர்களுக்கு அப்பால் கடல் பகுதி ஆழமான சரிவுகளைக் கொண்டிருக்கின்றது. இவ்வாறான பகுதிகளி லேயே உவர்நீர் மீன் பிடித் தொழில் மேற்கொள்ளப்படுகின்றது. இங்கு மீன்களைப் பிடிக்க ஆழ்கடல் மீன்பிடிப் படகுகள் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறான படகுகள் அதிகளவு மீன்களைப் பிடிப்பதுடன் அவ்வாறு பெறப்படும் மீன்கள் படகுகளில் உள்ள குளிரூட்டிகளில் பாதுகாக்கப்படுகின்றன. உவர்நீர் மீன்பிடிப்புக்கென பல வகையான வலைகள் பயன்படுத்தப்படுகின்றன.

அளவில் பெரிய மீன்களும் இங்கு ஆழ்கடல் மீன்பிடிப் படகுகள் மூலம் பிடிக்கப்படுகின்றன. இந்த படகுகள் வாரக்கணக்கில் மாதக்கணக்கில் மீன் பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன.

## மீன்பிடித் தொழிற்றுறைக்கு பயன்படுத்தப்படும் புதிய தொழிநுட்பங்கள்

### மீன்களைக் காட்டும் கருவி

ஆழ் கடலில் மீன்கள் உள்ள இடங்களை மிகத் துல்லியமாக அறிந்துகொள்வதற்கு இக்கருவி உதவுகின்றது.

### சோனார்

கடலின் ஆழ்பகுதியில் உள்ள மீன்கள் உள்ள இடங்களையும், கடலின் ஆழத்தினையும் 'சோனார் கருவி' மூலம் அறிந்து கொள்ள முடியும்.



## மீன்பிடியில் பயன்படுத்தப்படும் படகுகள்

- இலகு தனிப் படகு
- பாய்கள் கொண்ட படகு
- பைபர்கிளாஸ் படகு
- வள்ளம்
- தெப்பம்
- கட்டுமரம்
- பாரிய இயந்திரப் படகுகள்
- பன்முக ட்ரோலர் படகுகள்
- இயந்திர பைபர்கிளாஸ் படகுகள்

## பாரம்பரிய மீன் பிடி உபகரணங்கள்

- வீசுவலை
- அத்தங்கு
- ஈர்க்கில் இரை
- முள் இரை
- தூண்டில்



## வானியல் திணைக்களத்தின் உதவி

இந்திய செய்மதியினூடாக மழை, சூறாவளி, கடும் காற்று ஆகியன தொடர்பில் அறிந்துகொள்ளும் தகவல்கள் ரேடியோ கருவிகள் மூலம் மீனவர்களுக்கு அறிவிக்கப்படுகின்றது. இதனால் மீனவர்கள் பாதுகாக்கப் படுகின்றனர்.

## இலங்கையின் மீன் பிடித் துறைமுகங்கள்

காலி, மிரிஸ்ஸ, தங்கல்ல, கிரிந்த, சிலாபம், நீர்கொழும்பு, கொழும்பு, ஹிக்கடுவ, அம்பலங்கொட, கற்பிட்டி, பேருவளை, மட்டக்களப்பு, காங்கேசன்துறை, திருக்கோணமலை, அம்பாந்தோட்டை ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.



## கடலுக்குக் கொண்டு செல்லப்படும் மீன் பிடி உபகரணங்கள்

- தேங்காய் சிரட்டை
- தூண்டில் கொக்கி
- ஐஸ்கட்டிகளை உடைக்கும் சுத்தியல்
- கடல் லாம்பு
- படகில் நீரை அப்புறப்படுத்தும் கருவி





Digitized by noolaham.org | aavanaham.org

## சுற்றாடல்

பெயர்: ...............................................

**கீழ் காணும் வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிந்து அதன்கீழ் கீறிடுக.**

01. **பந்தலிட்டு வளர்க்கப்படும் தாவரம் பின்வருவனவற்றுள் எது?**

1. புடோல் 2. மிளகாய் 3. வெண்டி

02. 


**இங்குள்ள படத்தின்படி, காசித்தும்பைச் செடி ஒன்றை சிவப்பு நிறச் சாய நீருக்குள் வேருடன் இட்டு அவதானிக்கும்போது அறியப்படுவது;**

1. தாவரம் வாழ்வதற்கு நீர் அவசியம் என்பதை
2. தண்டு வழியே நீர் மேலே உந்தப்படுவதை அறிவதற்கு
3. மண் இன்றியும் தாவரம் வளரும் என்பதற்கு

03. **பின்வருவனவற்றில் ஒன்று கொட்டும்போது கடுமையான வலி எடுக்கும். அது எது?**

1. எறும்பு 2. குளவி 3. மூட்டைப்பூச்சி

04. **மரத்தின் இலைகளைப் பயன்படுத்தி மிக நுட்பமாகக் கூடு கட்டும் பறவை;**

1. முசுறு 2. தையல்சிட்டு 3. குளவி

05. **அதிகளவில் குளங்கள் காணப்படுவது;**

1. மலைப்பிரதேசங்களில் 2. கடற்கரையோரங்களில்
3. நீர்வீழ்ச்சிக்கு அருகில்

06. 

**படத்தில் காட்டப்பட்டுள்ள உடுத்தொகுதி;**

1. விருட்சிகம் 2. பெருங்கரடி
3. சிம்மம்

07. **உடற்பயிற்சி செய்வதற்கு முன் நாம் செய்ய வேண்டியது;**

1. உடலைத் தளர்த்துதல் 2. அதிக நீரை அருந்துதல்
3. சிறிதளவு உணவை உட்கொள்ளல்

08. **'ஔடத பானம்' தயாரிக்கப் பயன்படும் பூ எது?**

1. காசித்தும்பை 2. எக்சோரா
3. பொன்னாவரைப் பூ

09. **மழைக் காலங்களில் மழையில் நனைய விரும்பும் பிராணி எது?**

1. நாய் 2. எருமை 3. சிங்கம்

10. **தேசிய கீதத்தைப் பாடும்போது நாம் நிற்க வேண்டிய முறை;**

1. இலகுவாக நிற்றல் 2. கவனமாக நிற்றல்
3. ஒழுங்காக நிற்றல்




11. **ஒரு கண்ணாடிக் குவளையில் உள்ள குளிர்நீரின்மீது சிறிதளவு தேயிலையை இட்டபோது அந்நீர் விரைவாக கபில நிறமாக மாறியது. அத்தேயிலை பற்றிய உமது கருத்து யாது?**

1. தரம் குறைந்தது 2. கூடியளவு தேயிலை
3. தரம் கூடியது 4. சாயத்தைக் கொண்டது

12. **இலவசக் கல்வியின் தந்தை யார்?**

1. டி.பி.ஜயதிலக்க
2. கலாநிதி ஆனந்த குமாரசாமி
3. டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கர

13. **கிளைத் துண்டுகளை நடுவதன்மூலம் கன்றுகள் பெறப்படத்தக்க பயிர் வகை;**

1. மிளகாய் 2. பயறு 3. கங்குன்

14. **சிலந்தி ஒரு வகை.............................. ஆகும்.**

1. ஊர்வன 2. பூச்சி 3. ஒட்டுண்ணி

15. **சேனைப் பயிர்நிலத்தைப் பாதுகாப்பதற்கு விவசாயி மேற்கொள்ளும் ஓர் உபாயம்;**

1. வேலி அடைத்தல் 2. பயிர்களுக்கு காவல் காத்தல்
3. வேலியாக மரங்களை நடல்

16. **மண்ணிலுள்ள சிறிய நுண்ணுயிர்களை அறிந்துகொள்ளப் பொருத்தமான உபகரணம்;**

1. கைவில்லை 2. உருப்பெருக்கிக்காட்டி
3. தொலைநோக்கி

17. **போக்குவரத்திற்காக சைக்கிள்களைக் கூடுதலாகப் பயன்படுத்துவதுடன் தொடர்புபட்ட பிழையான கூற்று;**

1. சுற்றாடல் மாசடைவதைக் குறைக்கலாம்
2. போக்குவரத்து செலவுகளைக் குறைக்கலாம்
3. நோய்களைக் குறைக்கலாம்

(விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)

## கணிதம்

(ஜனவரி 03 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

| | | | | |
|---|---|---|---|---|
| 01) | 01. 1 | 02. 2 | 03. 3 | 04. 1 |
| | 05. 2 | 06. 1 | 07. 2 | 08. 3 |
| | 09. 2 | | | |
| 02) | 10. 30067 | | 11. 4940ml | |
| | 12. 48cm | | 13. 4.10 அல்லது 4m 10cm | |
| | 14. 18 குவளைகள் | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ட்ரோன் விமானத்தில் டெலிவரியாகும் பீட்சா






நகரங்களில் பீட்சா கடைகள் இன்று பெருமளவில் பெருகிவிட்டன. இப்போதெல்லாம் வாடிக்கையாளர்கள் கடைக்கு நேரடியாக வர வேண்டும் என்ற அவசியமில்லை. தொலைபேசி மூலம் ஓடர் செய்தால் போதும், வீட்டுக்கே வந்து அந்தக் கடையின் பணியாளர் பீட்சாவை தருவிப்பு (Delivery) செய்துவிட்டு சென்றுவிடுவார். தற்போது அந்த வேலையை ஆளில்லாத 'ட்ரோன்' விமானம் மூலம் செய்ய பெரிய உணவகங்கள் முயன்று வருகின்றன.

இந்தியாவின் உத்தரப்பிரதேச மாநிலம் லக்னோவில் செயல்பட்டு வரும் 'காகா' எனும் online உணவுப் பொருட்கள் விற்பனையகம் புதிய வழிகளைக் கண்டுபிடித்திருக்கிறது. பீட்சாக்களை 'ட்ரோன்' மூலம் தருவிப்பு செய்யும் முறையை அந்நிறுவனமே அறிமுகம் செய்துள்ளது.

ட்ரோன் மூலம் தருவிப்பு செய்யும்போது, இரு சக்கர வாகனத்தில் செல்லும் நேரம் மிச்சமாகிறது. தருவிப்பாளர்கள் நேரில் செல்லும் தேவை இல்லாமல் போவதால் மூன்றில் ஒரு பங்கு நேரம் மிச்சமாகிறது என அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. டெலிவரி வேலைக்கு அதிக பணியாளர்களை வேலைக்கு அமர்த்த வேண்டிய தேவையும் இதனால் குறைகின்றது. செலவும் மிச்சமாகின்றது. தற்போது பரீட்சார்த்தமாக ட்ரோன் மூலம் பீட்சா தருவிப்பை அந்த நிறுவனம் செய்து முடித்துள்ளது.

இந்தப் பரீட்சார்த்த முறை வெற்றி பெற்றதால் உணவுப் பொதிகளை வீடுகளுக்கு ட்ரோன் மூலம் டெலிவரி செய்ய அனுமதி தருமாறு லக்னோ மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் உள்நாட்டு விமானப் போக்குவரத்து அமைச்சகத்துக்கும் அந்த நிறுவனம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

- சப்ரி எம்.ஷாஃபி

## ஒரு நாள் ஒரு சொல்

| | |
|---|---|
| சுடு தண்ணீர் | ✗ |
| சுடுநீர் | ✓ |

சுடுதண்ணீர் என்று எழுதினால் என்ன தவறு. தண் என்றால் குளிர்ந்த என்று பொருள். தண்ணீர் என்றால் குளிர்ந்த நீர். சுடு தண்ணீர் என்றால் அபத்தமாக இருக்கின்றதல்லவா? எனவே, சுடுநீர் என்பதே சரி. அதேபோல், வெண்ணீர் என்றும் எழுதக் கூடாது. வெந்நீர் என்று எழுதுவதே சரியானதாகும்.

- சப்ரி எம்.ஷாஃபி

## விஜய் + தூவானம் இணைந்து வழங்கும் பரிசுப் போட்டி

பிரதி புதன்தோறும் Thoovaanam SMS ஊடாக கேட்கப்படும் பொது அறிவுக் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' கூப்பனில் நிரப்பி தபாலிட்டு ரூபா. 8,000 பெறுமதியான 3 பரிசில்களையும் பெற்றிடுங்கள்.

வாராந்தம் இவ் 3 பரிசில்களையும் வெல்வதற்கான கேள்வியினை அறிந்து கொள்ள → அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்க தொலைபேசியில் Thoovaanam SMS இனை செயற்படுத்திக்கொள்ளுங்கள்

### Thoovaanam SMS செயற்படுத்தும் முறை

F Thoovaanam
என Type செய்து
40404 எனும்
இலக்கத்திற்கு
SMS செய்யவும்
(இச்சேவை முற்றிலும் இலவசம்)

### அனுப்ப வேண்டிய முகவரி :

3 பரிசில்கள்
10.01.2018
விஜய்
த.பெ.இல: 2037
கொழும்பு

இவ்வார கூப்பன் - 10.01.2018
விடை : ..............................
பெயர் : ..............................
முகவரி : ......................
தொ.பே.இல: ..........................
பாடசாலை : ..........................
..............................
கையொப்பம்

3 பரிசில்கள் போட்டி - 27.12.2017
விடை: 22
வெற்றியாளர்:
கு.கோபிசரணி,
245, விவேகானந்தா வீதி,
காரைதீவு-01.

Gift sponsored by:
www.srijob.com







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்பக்க தேவாலயம்

கம்பளை யுகத்தில் 4 ஆம் புவனேக பாகு, 3 ஆம் விக்கிரமபாகு மன்னர்களால் அமைக்கப்பட்ட எம்பக்க தேவாலயமானது, இலங்கையின் மரச் செதுக்கு வேலைப் பாட்டிற்கு மிகச் சிறந்த இடமாக கருதப்படுகின்றது. இங்கு 32 தூண்களில் 126 சற்சதுர சிற்பங்கள் காணப்படுகின்றன. இவை யாவும் கற்பனையான பாரம்பரிய அலங்காரங்களை உள்ளடக்கியுள்ளது.



இங்கு காணப்படுகின்ற சிற்பங்களை உருவாக்கிய பெருமை தெல்மட மூலாச்சாரியார் அவர்களையே சாரும். இங்கு காணப்படும் கூரை அமைப்பானது, ஒரு மரத்திருகாணியில் 26 கிளைகளைக் கொண்ட சைக்கிள் சில்லைப் போன்று விசேட கூரை அமைப்பைக் கொண்டிருக்கும். இதனை 'மடல் குருபாவ' என அழைப்பர். இங்கு காணப்படும் சிற்பங்களில் நடனமாது, ரபான் அடித்தல், குதிரை வீரன், போர் வீரர், தாயும் சேயும், மல்யுத்த வீரன், கஜசிங்கம், பினர மலர், நாரிலதா, எதஹந்தலிகினயா, அன்னச் சோடி, பேருந்த பட்சி, தாமரை அலங்காரம் போன்ற உருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

பாத்திமா அஸ்ரா ஐயூப்,
தரம்-10,
அல்-அமீன் மத்திய கல்லூரி,
எல்படகம.

# விருதுகள் பற்றிய தகவல்கள்



* 'ஆசியாவின் நோபல்' பரிசு என அழைக்கப்படும் விருது;
  - ரமோன் மக்சேசே விருது
* 1959 இல் இலக்கியத்திற்காக நோபல் பரிசு பெற்ற பிரித்தானிய அரசியல்வாதி;
  - வின்ஸ்டன் சேர்ச்சில்
* இசைத்துறைக்கான உயர்ந்த விருதான 'கிராமி' விருதுகளை வழங்கி வரும் நாடு;
  - அமெரிக்கா
* 'பாரத ரத்னா' விருது பெற்ற வெளிநாட்டவர்கள் இருவர்...
  - நெல்சன் மண்டேலா (தென்னாபிரிக்கா)
  - அப்துல் கபார்கான் (பாகிஸ்தான்)


பாத்திமா திஹ்லா,
தரம்-7,
அஜ்மீர் தேசிய பாடசாலை,
உக்குவலை.

நீங்களும் ஆக்கங்களை அனுப்பலாம்
முகவரி
மாணவர் ஆக்கங்கள்,
'விஜய்'
த.பெ.இல 2037,
கொழும்பு

# மாணவர் ஆக்கங்கள்



# எமது நாடு




* எமது தாய்த் திருநாடு இலங்கையாகும்.
* இது மாங்காய் வடிவானது.
* கடலால் சூழப்பட்டுள்ள இது 9 மாகாணங்களையும் 25 மாவட்டங்களையும் கொண்டுள்ளது.
* எமது நாட்டில் பிரதானமாக மூன்று இன மக்கள் வாழ்கின்றனர்.
* இங்கு பல கிராமங்களும், நகரங்களும் உள்ளன.
* எமது நாடு எழில் மிகு நாடாகும்.

எம்.ஜுமானாஹ் எஃப்.ஃபைஸி,
தரம்-05,
கலு/ஸேம் ரிபாய் ஹாஜியார் மஹா வித்தியாலயம்,
பேருவளை.

# எங்கள் அன்புத் தந்தை...!



குடும்பத்தை சுமக்கும் கருவி
பாசத்தைப் பொழியும் அருவி
முயற்சிக்கு அழகு சேர்த்து
பணத்தை சேமிக்கும் வங்கி
கஷ்டத்தை எதிர்நோக்கும்
பீரங்கி...

உண்மை கூறும் கதை
வீரத்தின் அடையாள விதை
துன்பத்தை தாங்கும் வேர்
உறவினைப் பேணும் தூண்
உழைப்பினைக் காணும் வான்...

தூக்கத்தை மறக்கும் ஜீவன்
துக்கத்தை மறைக்கும் ஆதவன்
ஆசைகளை நிறைவேற்றும்
மாமனிதர்
ஆடம்பரத்தை நோக்காத தந்தை
இவரே! அன்புத் தந்தை...!

எம்.கோணேஸ்வரன்
போத்திஷா,
தரம்-11,
க/இந்து தேசிய கல்லூரி,
புஸல்லாவ.

# அறியாதவை

01. உலகில் முதன்முதலில் தோன்றிய பாலூட்டி இனம் எது?
    - மனிதக் குரங்கு
02. பறவைகள் கூடு கட்டாத மரம் எது?
    - இலந்தை மரம்
03. மனிதனைப் போல கனவு காணும் விலங்கு எது?
    - நாய்



04. 270° வரை தலையைத் திருப்பக் கூடிய பறவை எது?
    - ஆந்தை
05. காலைப் பிடித்துத் தூக்கினால் இறக்கும் பறவை எது?
    - தாரா
06. வாழ்நாளில் தூங்காத உயிரினம் எது?
    - எறும்பு

எம்.எச்.எஃப். அப்ஸா,
தரம்-10,
ஹ/ஸாஹிரா தேசிய பாடசாலை,
ஹம்பாந்தோட்டை.

# அதிசயம் ஆனால் உண்மை

01. ரஷ்யாவை சேர்ந்த பியோபர் வெஸ்பெட் என்பவரின் மனைவி 18 ஆம் நூற்றாண்டின் மத்தியில் 16 இரட்டைக் குழந்தைகளைப் பெற்றார். அக்காலத்தில் அது சாதனையாகப் பாராட்டைப் பெற்று, அப்போது ரஷ்யாவை ஆண்ட இரண்டாம் அலக்சாண்டரிடம் அவர் வெகுமதிகளையும் பெற்றார்.



02. கச கசா செடியின் பூ ஒன்றில் மட்டும் 3000 விதைகள் இருக்குமாம்.

03. அவுஸ்திரேலியாவிலுள்ள 'புருஷ்' என்ற வான் கோழிகள் முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும். குஞ்சுகள் பொரித்து சில மணி நேரங்களின் பின் அவை பறக்க ஆரம்பித்துவிடும்.

எம்.ஐ.எப்.ஸைனப்
இனாயத்துல்லாஹ்,
தரம்-8,
மாறை-அறபா தேசிய பாடசாலை,
வெலிகம.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுத் தோட்டத்தில் செடிகள் வளர்ப்பதனால் கிடைக்கும் பயன்கள்





- வீட்டுக்கு அழகு சேர்க்கும்
- பூக்கள், பழங்கள், காய்கறிகள் பெறலாம்
- தூய காற்றை சுவாசிக்கலாம்
- நிழலும் குளிர்ச்சியும் தரும்
- மன அழுத்தம் குறையும்.

விஜய் PLUS +

# உருவை அமையுங்கள்



# வீட்டின் உட்பாகங்கள்




-நுஸ்ஸி

# வரைந்து பழகுவோம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*01.* இவர்கள் என்ன வேலை செய்கின்றனர்?

.................................................

*02.* இந்த தோட்டத்தில் எவ்வகைப் பயிர்கள் நடப்பட்டுள்ளன?

.................................................

*03.* பயிர்களுக்கு நீர் இறைக்கப்படுவது ஏன்?

.................................................




01. படத்தில் காணப்படும் தயாரிக்கப்பட்ட இனிப்பு உணவுகள் யாவை?
1. செண்ட்விச், கப்கேக், வாழைப்பழம்
2. கப்கேக், யோகட், பிஸ்கட்
3. அப்பிள், வாழைப்பழம், யோகட்




02. பாடசாலை செல்லும்போது எடுத்துச் செல்லும் பொருட்கள் எவை?
1. பால், அப்பிள் 2. உணவுப் பெட்டி, கப்கேக்
3. உணவுப் பெட்டி, நீர்ப் போத்தல்

03. இங்கு காணப்படும் பழங்கள் யாவை?
1. அப்பிள், ஸ்ட்ரோபெரி, தோடை 2. அப்பிள், அன்னாசி, வாழைப்பழம்
3. வாழைப்பழம், ஸ்ட்ரோபெரி, அப்பிள்

04. இங்கிருப்பவற்றில் பால் உற்பத்திப் பொருட்கள் யாவை?
1. பிஸ்கட், யோகட், கப்கேக் 2. யோகட், பால், சீஸ் 3. பால், சீஸ், செண்ட்விச்

| | | |
|---|---|---|
| Trumpet | Piano | Bass |
| Violin | Clarinet | Guitar |
| French horn | Saxophone | Drum set |



❋ அட்டவணையில் இருக்கும் சொற்களை தெரிவுசெய்து உரிய படங்களுக்குக் கீழ் எழுதுக.

❋ இங்கிருப்பவற்றில் தந்திக் கருவிகள் எவை?

.................................................

❋ இங்கு காணப்படும் காற்று வாத்தியக் கருவிகள் எவை?

.................................................

❋ நீங்கள் அறிந்த இசைக்கருவிகள் சிலவற்றைக் குறிப்பிடுங்கள்.

.................................................

◈ சோஃபாமீது ......................... உள்ளது.



◈ ......................... கீழே பூனை காணப்படுகின்றது.



◈ பெட்டியின் ......................... பூனை உறங்குகின்றது.



◈ மரத்தின் .........................மனிதன்.

-ஸீநு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருத்தமான நிழற்படத்துடன் இணையுங்கள்




## வழி காட்டுங்கள்



## ஒலி இயைபுடைய சொல்லில் வட்டமிடுக




## படங்களுக்கான தமிழ்ச் சொல் தருக






## அறிவுக்கு விருந்து (27.12.2017) விடைகள்




## குறுக்கெழுத்துப் போட்டி: 274

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | | |
| 4 | | | | ■ | ■ |
| | ■ | 5 | 6 | | ■ |
| | ■ | | | | 7 |
| | ■ | | ■ | 8 | |
| ■ | ■ | ■ | | 9 | ■ |

### மேலிருந்து கீழ்

1. மானக்கேடு.
2. போதை தரும்.
3. ஆடு, மாடுகள் இவ்வாறு அழைக்கப்படும்.
5. மாசு. (குழம்பியுள்ளது)
7. இனம்.
9. நித்திரை. (குழம்பியுள்ளது)



### இடமிருந்து வலம்

1. அகந்தை.
4. கொடையாளி.
6. வெட்ட வெட்ட வளரும். (குழம்பியுள்ளது)
7. கழிவுநீர் செல்லும் கால்வாய். (குழம்பியுள்ளது)
8. வேகம்.
9. பண்டைய காலத்தில் இந்தப் பணிக்காக புறாக்கள் பயன்படுத்தப்பட்டன. (மாறியுள்ளது)

## குறுக்கெழுத்துப் போட்டி: 273

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 செ | ரி | 2 மா | ன | ம் | ■ |
| ம் | 3 த | ப் | 4 ச | 5 நி | ■ |
| ம | ■ | பி | ழ் | ல | 6 க |
| றி | ■ | ளி | ■ | 7 ம | லை |
| யா | ■ | னை | ■ | ர் | 8 வா |
| டு | 9 கூ | ■ | ■ | ■ | ணி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து சுயம் சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் ஆன்மீக யோகாசனப் பயிற்சிப் பட்டறை ஒன்று பசறை பிரதேசத்தில் பது/ஸ்ரீ கணேஷா தமிழ் வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களையே இங்கு காண்கிறீர்கள்.

(தகவல்: ந.மலர்வேந்தன்)

## விஜய் விழா உலா

த.பெ.எண் 2037
கொழும்பு



வேவெஸ்ஸ குரூப் லோவர் டிவிசன் பதுளையைச் சேர்ந்த சங்கரேஸ்வரன்-சர்மிளா தம்பதியரின் செல்வப் புதல்வன் டியோ விநாயக் தேவ், தனது முதலாவது பிறந்ததினத்தை 07.01.2018 அன்று விமர்சையாகக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.






பசறை பிரதேச எக்கமுத்து முன்பள்ளி சிறார்களின் வருடாந்த கலைவிழாவும் பரிசளிப்பு நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றன. இதன்போது, பிரதம அதிதியாக பசறை நகர வர்த்தக பிரமுகரும் சமூக சேவை ஆர்வலருமான அஷ்டலக்ஷ்மி கார்த்தீஸ்வரன் கலந்து கொண்டு சிறப்பித்ததோடு இந்நிகழ்வில், இடம்பெற்ற கலைநிகழ்வையும் இங்கு காணலாம்.

## கைவண்ணங்கள்




எஃப்.றிஸ்மா,
குட்ஷோப் சர்வதேச பாடசாலை,
மாவனல்லை.



எஃப்.ஹனா,
சுலைமானியா முஸ்லிம் மகா வித்தியலாயம்,
குரீகொட்டுவ.



அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
'விஜய்'
த.பெ.எண் 2037
கொழும்பு



ஆர்.சதுர்சனா,
வெஸ்ஹோல் தமிழ் வித்தியாலயம்,
கெட்டபுலா.




கே.கனிஷ்டிஜா,
யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை,
யாழ்ப்பாணம்.



என்.பிரவீனா,
ஹைலன்ஸ் கல்லூரி,
ஹட்டன்.



ஏ. சாக்கீர்,
கிண்ணியா மத்திய கல்லூரி,
கிண்ணியா.



ஜே.நிதர்ஷன்,
புந்தோட்டம் தமிழ் வித்தியாலயம்,
வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2017, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



**பெயர்:** எம்.ரோஷான்.
**புள்ளிகள்:** 181.
**பாடசாலை:** கா/தாஸிம் கல்லூரி, காலி.
**பெற்றோர்:** எம்.ரியாஸ்-எஸ்.நூர்ஜஹான்.



**பெயர்:** ஐ.அப்துல்லாஹ்.
**புள்ளிகள்:** 180.
**பாடசாலை:** மாவ/ தாருல் உலூம் முஸ்லிம் மகா வித்தியாலயம், ஹுரிமலுவை.



**பெயர்:** எஸ்.வபாயா.
**புள்ளிகள்:** 175.
**பாடசாலை:** மாவ/ தாருல் உலூம் முஸ்லிம் மகா வித்தியாலயம், ஹுரிமலுவை.



**பெயர்:** கே.சிப்கா.
**புள்ளிகள்:** 168.
**பாடசாலை:** மாவ/ தாருல் உலூம் முஸ்லிம் மகா வித்தியாலயம், ஹுரிமலுவை.



**பெயர்:** ஐ.ஸைனப்.
**புள்ளிகள்:** 181.
**பாடசாலை:** கம்/ அல்-அஸ்ஹர் வித்தியாலயம், சேலம்பிரிஜ்.



**பெயர்:** எஃப்.சப்ரா.
**புள்ளிகள்:** 177.
**பாடசாலை:** கம்/ அல்-அஸ்ஹர் வித்தியாலயம், சேலம்பிரிஜ்.



**பெயர்:** ஐ.இக்ரம்.
**புள்ளிகள்:** 170.
**பாடசாலை:** கம்/ அல்-அஸ்ஹர் வித்தியாலயம், சேலம்பிரிஜ்.



**பெயர்:** எச்.அஹமட்.
**புள்ளிகள்:** 169.
**பாடசாலை:** ஜாமியுல் அஸ்ஹர் மத்திய கல்லூரி, உடதலவின்ன மடிகே.



**பெயர்:** எம்.அம்ஹர்.
**புள்ளிகள்:** 167.
**பாடசாலை:** ஜாமியுல் அஸ்ஹர் மத்திய கல்லூரி, உடதலவின்ன மடிகே.



**பெயர்:** ஏ.ரஸ்மி.
**புள்ளிகள்:** 167.
**பாடசாலை:** ஜாமியுல் அஸ்ஹர் மத்திய கல்லூரி, உடதலவின்ன மடிகே.



**பெயர்:** எஸ்.உஸ்மான்.
**புள்ளிகள்:** 163.
**பாடசாலை:** ஜாமியுல் அஸ்ஹர் மத்திய கல்லூரி, உடதலவின்ன மடிகே.



**பெயர்:** எஃப்.முபாரகா.
**புள்ளிகள்:** 158.
**பாடசாலை:** ஜாமியுல் அஸ்ஹர் மத்திய கல்லூரி, உடதலவின்ன மடிகே.


உங்கள் அபிமான
தமிழ் Mirror
திங்கள் முதல் வெள்ளிவரை
விலை Rs. 10/=
தினசரி தேசிய பத்திரிகையாக
வெளிவருகிறது
wijeyanewspapers helping shape opinions
the SUNDAY TIMES
விஜய்
DailyMirror
தமிழ் Mirror www.tamilmirror.lk
விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆயுபோ්வන්
ஆயுபோவன்
**வணக்கம்**

**இன்றைய பாடத்தில் மாலாவுக்கும் வசந்திக்கும் இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.**

මාලා: ආයුබෝවන් වසන්ති. මම පරක්කුවුණාද?
ஆயுபோவன் வசந்தி. மம பரக்குவுனாத?
மாலா: **வணக்கம் வசந்தி. நான் தாமதித்துவிட்டேனா?**

වසන්ති: නැහැ මාලා. මමත් දැනුයි ආවේ. නිවාඩු කාලය කොහොමද?
நெஹெ மாலா. மமத் தெனுய் ஆவே. நிவாடு காலய கொஹொமத?
வசந்தி: **இல்லை மாலா. நானும் இப்போதுதான் வந்தேன். விடுமுறைக் காலம் எப்படி?**

මාලා: හොඳයි වසන්ති. අපි නත්තලට මාමලාගේ ගෙදර ගියා.
ஹொந்தய் வசந்தி. அப்பி நத்தலட்ட மாமலாகே கெதர கியா.
மாலா: **நல்லம் வசந்தி. நாங்கள் நத்தாருக்கு மாமா வீட்டுக்குப் போனோம்.**

වසන්ති: අපි කොහේවත් ගියේ නැහැ. අපේ පුංචිලා අපේ ගෙදර ආවා.
அப்பி கொஹேவத் கியே நெஹெ. அப்பே புஞ்சிலா அப்பே கெதர ஆவா.
வசந்தி: **நாங்கள் எங்கேயும் போகவில்லை. எமது சித்தி வீட்டார் எம் வீட்டுக்கு வந்தார்கள்.**

මාලා: වසන්තිට අලුත් පොත් බෑගයක්ද?
வசந்திட்ட அலுத் பொத் பேகயக்த?
மாலா: **வசந்திக்கு புதுப் புத்தகப் பையொன்றா?**

වසන්ති: ඔව් මාලා. අම්මා මට අලුතෙන් ඔක්කොම අරගෙන දුන්නා.
ஒவ் மாலா. அம்மா மட்ட அலுதென் ஒக்கொம அரகென துன்னா.
வசந்தி: **ஆம் மாலா. அம்மா எனக்கு எல்லாம் புதியதாக வாங்கித் தந்தார்.**

මාලා: අපේ අලුත් ගුරුතුමිය කවුද දන්නේ නැහැ නේද?
அப்பே அலுத் குருதுமிய கவுத தன்னே நெஹெ நேத?
மாலா: **எமது புதிய ஆசிரியை யாரென்று தெரியாது தானே?**

වසන්ති: ගීතා ටීචර් නම් හොඳයි නේද?
கீதா டீச்சர் நம் ஹொந்தய் நேத?
வசந்தி: **கீதா டீச்சர் என்றால் நல்லது அல்லவா?**

මාලා: ඔව්.. එයා නම් හොඳයි.
ஒவ்... எயா நம் ஹொந்தய்.
மாலா: **ஆம்... அவரென்றால் நல்லது.**

වසන්ති: අන්න පාසල් බසය එනවා වසන්ති.
அன்ன பாசல் பசய எனவா வசந்தி.
வசந்தி: **அதோ பாடசாலை பஸ் வருகிறது வசந்தி.**



**பயிற்சி**

**சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

1. விடுமுறைக் காலம் எப்படி?
   ......................................
2. எங்களுடைய புது ஆசிரியை.
   ......................................
3. பாடசாலை பஸ் வருகிறது.
   ......................................




## இறந்தகால தனி வாக்கியம் மற்றும் எதிர்கால தனி வாக்கியம்

மேற்காணும் இரு வகை வாக்கியங்களினதும் 'எதிர்மறை' நிலையில் உள்ள வாக்கியங்களை மேலும் இங்கே ஒப்பிட்டுப் பயில்வோம்.

**எதிர்மறை வாக்கியங்கள் - Negative Sentences**

அ) He did not draw a new picture.
அவன் புதிய படம் ஒன்றை வரையவில்லை.
(இறந்தகால தனி வாக்கியம்-Past simple tense)

ஆ) He will not draw a new picture.
அவன் புதிய படம் ஒன்றை வரையமாட்டான்.
(எதிர்கால தனி வாக்கியம்-Future simple tense)

★ He didn't draw. (Past tense)
அவன் வரையவில்லை. (இறந்தகாலம்)

★ He won't draw. (Future tense)
அவன் வரையமாட்டான். (எதிர்காலம்)

★———★———★———★

இ) She did not write the letter yesterday.
அவள் நேற்று அந்தக் கடிதத்தை எழுதவில்லை.
(இறந்தகால தனி வாக்கியம்-Past simple tense)

ஈ) She will not write the letter tomorrow.
அவள் நாளை அந்தக் கடிதத்தை எழுதமாட்டாள்.
(எதிர்கால தனி வாக்கியம்-Future simple tense)

★ She didn't write. (Past tense)
அவள் எழுதவில்லை. (இறந்தகாலம்)

★ She won't write. (Future tense)
அவள் எழுதமாட்டாள். (எதிர்காலம்)

★———★———★———★

உ) It did not jump into the well.
அது கிணற்றுக்குள் பாயவில்லை.
(இறந்தகால தனி வாக்கியம்-Past simple tense)

ஊ) It will not jump into the well.
அது கிணற்றுக்குள் பாயமாட்டாது.
(எதிர்கால தனி வாக்கியம்-Future simple tense)

★ It didn't jump. (Past tense)
அது பாயவில்லை. (இறந்தகாலம்)

★ It won't jump. (Future tense)
அது பாயமாட்டாது. (எதிர்காலம்)

**குறிப்பு:** 'did not' என்பதன் சுருக்கம் didn't என்பதாகும்.
'will not' என்பதன் சுருக்கம் won't என்பதாகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 19 வயதிற்குட்பட்டோருக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பம்

19 வயதிற்கு உட்பட்டவர்களுக்கான ஐசிசி யின் உலகக் கிண்ணப் போட்டிகள் ஜனவரி 13 தொடக்கம் பெப்ரவரி 3 வரை நடைபெறவுள்ளது. இதில் இலங்கை அணி ஜனவரி 14 ஆம் திகதி தனது முதலாவது போட்டியில் கலந்துகொள்ளவுள்ளது.

நியூஸிலாந்தில் நடைபெறுகின்ற மேற்படி உலகக் கிண்ணப் போட்டிகளில் 16 நாடுகள் பங்குகொள்கின்றன. நான்கு பிரிவுகளின் கீழ் நடைபெறுகின்ற இப்போட்டிகளில் A, B, C, D எனும் பிரிவுகளில் ஒவ்வொரு பிரிவிலும் நான்கு நாடுகள் இடம்பெறுகின்றன. இலங்கை அணியின் தலைவராக சமிந்து மெண்டிஸ் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




நிஜமான முற்றிலும் திறமைமிகு இந்திய அணியை அதன் வெளிநாட்டு சுற்றுலாவிலேயே இனங்கான முடியும் என இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்றுனர் ரவி சாஸ்திரி தெரிவித்துள்ளார்.

# வெளிநாட்டு சுற்றுலாக்களே அணியை இனங்காண உதவும்


ரவி சாஸ்திரி

அதாவது, கடந்த போட்டித் தொடர்கள் ஒன்பதில் ஆறு போட்டிகள் உள்நாட்டிலேயே நடை பெற்றவை என்பதால், வெளிநாட்டு ஆடுகளங்களில் விளையாடுவதைப் பொறுத்தே இந்திய அணியின் முழுத் திறமையை அளக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதற்கமைய இந்திய அணியின் தென்னாபிரிக்காவிற்கான விஜயம் மிகுந்த அவதானிப்பிற்குரியதாக அமையும் என்பதும் இந்திய அணியின் தலைவர் விராட் கோஹ்லி திருமணமாகிய பின்னர் கலந்துகொள்ளும் முதலாவது போட்டி இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அவுஸ்திரேலிய T20 அணியின் பயிற்றுனராக பொன்டிங்




2020 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள T20 உலகக் கிண்ணப் போட்டிகளில் கலந்துகொள்ளும் அவுஸ்திரேலிய அணியின் பயிற்றுனராக அவ் அணியின் முன்னாள் தலைவர் ரிக்கி பொன்டிங் நியமிக்கப்படவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இது தொடர்பாக, அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை ரிக்கி பொன்டிங்குடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றது.

தற்போது அவுஸ்திரேலியாவின் பயிற்சியாளராக உள்ள லீமெனின் ஒப்பந்தகாலம் 2019 ஆம் ஆண்டுடன் முடிவடையவுள்ளது. இதற்கமையவே, ஆஸி T20 அணிக்கு பொன்டிங்கை நியமிக்க திட்டமிடப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டு T20 உலகக் கிண்ணப் போட்டிகள் அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தரப்படுத்தல் பட்டியலில் ஸ்டீவன் ஸ்மித் முதலிடத்தில்

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் துடுப்பாட்ட தரப்படுத்தல் பட்டியலில் முதலாவது இடத்தை அவுஸ்திரேலிய வீரர் ஸ்டீவன் ஸ்மித் தக்கவைத்துக்கொண்டுள்ளார். இவர் 'ஏஷஸ்' போட்டிகளில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் 947 புள்ளிகளுடனேயே முதலிடத்தைப் பெற்றுள்ளார். இந்தியாவின் கோஹ்லி 893 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், இந்தியான் புஜாரா 873 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.



பந்துவீச்சில் இங்கிலாந்தின் ஜேம்ஸ் அன்டர்சன் முதலிடத்திலும் தென்னாபிரிக்காவின் சாஜிரோ ரபாடா இரண்டாவது இடத்திலும், இந்தியாவின் ஜடேஜா மூன்றாவது இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.



# டைகர் வூட்ஸின் பயிற்றுனர் நீக்கம்

உலகப் புகழ் 'கொல்ஃப்' விளையாட்டு வீரரான டைகர் வூட்ஸ் தனது பயிற்றுனர் கிறிஸ் கோமாவை பணியிலிருந்து நீக்கியுள்ளார். மூன்றாண்டு கால ஒப்பந்தம் முடிவடைந்ததையடுத்தே, இம்முடிவை டைகர் வூட்ஸ் மேற்கொண்டுள்ளார். கடந்த வருடம் ஏப்ரல் மாதம் தொடக்கம் உடல் உபாதையினால் அவதிப்பட்டு வந்த டைகர் வூட்ஸ் இனிமேல் நடைபெறவுள்ள போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள அதேவேளை, தனது பணிகளை தானே கவனித்துக்கொள்ளவிருப்பதாகவும் அறிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரம்சார் உடன்படிக்கையின் பிரகாரம் இலங்கையிலும் சில இடங்கள் ஈரநிலங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இலங்கை ஒரு தீவு என்பதனால், கரையோரப் பகுதிகளைச் சார்ந்ததாக பல ஈரநிலங்களைக் காணலாம். தவிர, நாட்டின் உட் பகுதிகளிலும் பல ஈரநிலங்கள் உள்ளன. மேலும், பலதரப்பட்ட தேவைகளுக்காக செயற்கையாக உருவாக்கப்பட்ட ஈரநிலங்களும் உள்ளன.



## இலங்கையில் உள்ள ஈரநிலங்களின் வகைகள்

**இயற்கை நன்னீர் ஈரநிலம்**

★ **ஆறுகள், ஏரிகள், வாவிகள்:** வருடம் முழுவதும் நீர் உள்ள பிரதான ஆறுகள், ஏரிகள், வாவிகள் என்பனவும், குறித்த காலப்பகுதியில் மட்டும் நீர் நிரம்பும் சிறிய வாவிகள், ஏரிகள் என்பனவும் இதில் அடங்கும்.

★ **நன்னீர் சதுப்புநிலங்கள்:** வளவ்வத்த வதுரான சதுப்புநிலக்காடே எமது நாட்டில் உள்ள ஒரேயொரு நன்னீர் சதுப்புநிலக்காடு ஆகும். இந்த சதுப்புநிலத்தில் மட்டும்தான் 'ஹொரவெல்' என்ற தாவர இனம் உள்ளது.

# எமது நாட்டின் ஈரநி



## இலங்கை ஈரநிலங்களின் சிறப்புக்கள்

★ **ஈரநிலங்களுக்கு அருகில் முதல் குடியேற்றங்கள் ஆரம்பமாகியமை:**

இலங்கையிலும் ஈரநிலங்களை சார்ந்ததாகவே முதல் குடியேற்றம் உருவாகியதாக வரலாற்றில் குறிப்பிடப்படுகின்றது. மல்வத்து ஓயாவுக்கு அருகாமையிலேயே, முதல் குடியேற்றம் உருவாகியுள்ளது. அனுராத கிராமத்தினையும் உபதிஸ்ஸ கிராமத்தினையும் இதற்கு உதாரணங்களாகக் கூறலாம்.

★ **பிரதான உணவும் பிற போஷாக்கு தேவைகளும் நிறைவேற்றப்படுகின்றமை:**

செயற்கை ஈரநிலமான வயல்வெளிகளிலேயே அரிசி விளைவிக்கப்படுகின்றது. இவற்றை தவிர; மீன் வளங்கள், பலதரப்பட்ட காய்கறிகள் மற்றும் பழங்கள், மருந்து வகைகள் என்பனவும் ஈரநிலங்களிலிருந்தே பெறப்படுகின்றன.

★ **பொருளாதாரம் வளம்பெறல்:**

வீட்டுக் கைத்தொழிலாக மேற்கொள்ளப்படும் பாய் பின்னல், பெட்டி பின்னல் என்பனவற்றுக்கு தேவையான பன்புற்கள் ஈரநிலத்திலிருந்தே பெறப்படுகின்றன. மேலும், ஈரநிலங்களில் விளையும் சில தாவரங்களின் பழங்கள் மற்றும் மூலிகைகளினால் உள்ளூர் பானங்கள் தயாரிக்கப்படுகின்றன. அத்துடன், களப்பு மற்றும் கழிமுகம் சார்ந்த பகுதிகளிலும் நாட்டின் உள்ளக நீரேந்துப் பகுதிகளிலும் மீன்பிடி தொழிற்துறை மேற்கொள்ளப்படுகின்றது.



★ **கலாசார ரீதியில் முக்கியத்துவம் பெறல்:**

வாவிகள் எமது கலாசாரத்தில் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இலங்கை நீர்ப்பாசன முறைகள் உலகம் முழுவதும் பிரபல்யம் பெற்றுள்ளன. வாவிகள் மற்றும் கால்வாய்கள் நிர்மாணிப்பதற்கான அனுபவம் கொண்ட மக்கள் வாழ்கின்ற நாடாக இலங்கை பிரபல்யம் பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ ஆழமற்ற ஏரி மற்றும் நீர் கரைபுரளும் இடங்கள்: ஆறுகள் கரைபுரள்வதால் ஏற்படும் ஈரநிலமாகும். மகாவலி கங்கை ஆற்றுப் பகுதிகளுக்கு அருகாமையில் இவ்வாறான பகுதிகளைக் காணலாம். இவை அதிக உயிர்ப்பல்வகைமை நிலவும் பகுதியாகும்.

### இயற்கை உவர்நீர் மற்றும் சவர்நீர் ஈரநிலம்

★ ஆற்றுவாய், களப்பு, கழிமுகம்: மீன்பிடி தொழிற்துறைக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சுற்றாடல் தொகுதிகளாகும்.

★ கண்டல் காடுகள்: களப்பு, ஆற்றுவாய் பகுதிகளில் வளரும் தாவரங்களை இங்கு காணலாம். மீன்பிடி தொழிற்துறைக்கும் கடல் அரிப்பினை தடுப்பதற்கும் உதவுகின்றன.

★ பவளப்பாறைகள்: உயிர்ப்பல்வகைமை அதிகம் உள்ள பகுதியாகும். சுற்றுலாத் தொழிற்துறையிலும் பெரும் பங்களிப்பு செய்கின்றது.

★ கடற்புல்வெளி: உயிர்ப்பல்வகைமை அதிகம் கொண்டதும் அதிகளவிலான உணவுகளைக் கொண்டதுமான சுற்றாடல் தொகுதியாகும்.

### செயற்கை ஈரநிலங்கள்

★ உள்ளக நீர்த்தேக்கங்கள், வாவிகள்: சுமார் 10 ஆயிரம் அளவிலான பெரிய நீர்த்தேக்கங்களும் வாவிகளும் இலங்கையில் உள்ளன.

★ நீர்வாழ் உயிரின வளர்ப்புக் குளங்கள்: நீர்வாழ் உயிரினங்களின் வளர்ப்புப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்படும் குளங்களும் பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் பெறும் ஈரநிலமாகும்.

★ உப்பளங்கள்: உப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் சுற்றாடல் தொகுதியாகும்.

★ வயல்கள்: நெற்பயிர் வளர்ப்புக்காகப் பயன்படுத்தப் படுகின்ற - பொருளாதார ரீதியிலும் உணவுப் பாதுகாப்பு தொடர்பிலும் முக்கியத்துவம் வாய்ந்த ஈரநிலமாகும்.










## இலங்கையின் விசேட ஈரநிலங்கள் சில...

★ **முத்துராஜவெல சதுப்புநிலம்:** களனி ஆற்றுவாய்க்கும் நீர்கொழும்பு களப்புக்கும் இடையில் அமைந்துள்ள 3,000 ஹெக்டெயர் அளவு கொண்ட சதுப்பு நிலமாகும். பண்டைய காலத்தில் இப்பகுதி மிகவும் வளமான விவசாய நிலமாக இருந்துள்ளது. காலனித்துவ ஆட்சிக்காலப் பகுதியில் பல்வேறு நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதனால், இந்த ஈரநிலம் சவர்நீர் கொண்ட தரிசுநிலமாக மாறியது. ஈரநிலத்திற்கே உரிய ஊர்வன, பறவைகள், பாலூட்டிகள் போன்றனவும் பலவகையான தாவரங்களும் இப்பகுதியில் உள்ளன.

★ **பெல்லன்வில - அத்திடிய சதுப்புநிலம்:** கொழும்பு நகருக்கு அருகாமையில் பொல்கொட வாவியின் கரைப்பகுதியில் அமைந்துள்ள 60 ஹெக்டெயர் பரப்புக் கொண்ட ஈரநிலமாகும். இங்கு ஆழமான மற்றும் ஆழமற்ற சதுப்பு நிலப்பகுதிகள் உள்ளன. 166 பறவையினங்களும் 71 வண்ணத்துப்பூச்சி இனங்களும் 30 ஊர்வனங்களும் கண்டல் தாவரங்களும் இப்பகுதியில் உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

## 2018 பெப்ரவரி 02
## உலக ஈரநில தினம் அனுஷ்டிப்போம்

**இவ்வார ஈரநில வினா**

இலங்கையிலுள்ள விசேட ஈரநிலங்கள் 2 தருக.

★ ஈரநில வினாவுக்கு விடை எழுதி ஈரநில தகவல்கள் அடங்கிய புத்தகம் மற்றும் சுற்றாடல் தகவல்கள் அடங்கிய 10 கையேடுகளை வாரம்தோறும் வென்றிடுங்கள்.

★ உங்கள் விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் எழுதி அருகிலுள்ள கூப்பனை பூர்த்திசெய்து கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

ஈரநில வினா - 02
'விஜய்'
த.பெ.எண் 2037
கொழும்பு.

பெயர் : ..............................

முகவரி: ..............................

..............................

தொலைபேசி இல.: ..............................

பாடசாலை: ..............................

பெற்றோர்/ பாதுகாவலர் கையொப்பம்: ..................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருவா அம்பலம்

இலங்கையின் மிகவும் பழைமைவாய்ந்த அம்பலங்களில் கிருவா அம்பலமும் ஒன்றாகும். கிருவா அம்பலமானது, அலுத்னுவர நகரின் மத்தியில் அலுத்னுவர தெடிமுண்ட தேவாலய சூழலில், அமைந்துள்ளது. கி.பி 1236 முதல், 1270 வரை தம்பதெனியாவினை தலைநகராக கொண்டு ஆட்சி செய்தவனும், 1255 இல் கலிங்க மாகனை, பொலன்னறுவையிலிருந்து துரத்திய மன்னனுமாகிய இரண்டாம் பண்டித பராக்கிரமபாகு மன்னனின் பட்டத்து ராணியாகிய, சுனேத்ரா தேவியால், இந்த அம்பலம் கட்டப்பட்டது என வாய்மொழிக் கதைகள் கூறுகின்றன. அவள் ருகுனையில் கிருவா எனுமிடத்தில் வாழ்ந்த, ராமச்சந்திரன் எனும் பிராமண வம்சத்தை சேர்ந்த ஒருவரின் மகளாவார். வரலாற்று மூலாதாரங்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன. சிறுவயதில் கிருவாயில் வாழ்ந்ததால், அவள் கிருவாதேவி என அழைக்கப்பட்டாள். சுனேத்ரா எனும் புனை பெயரைக் கொண்ட அவள், கிருவச சுனேத்ராதேவி என மக்களால் அழைக்கப்பட்டாள். கிருவசாதேவிக்கு, ருகுனை, வாகம்புற, மாயரட்டை ஆகிய பிரதேசங்களில், ராணிக்கு உரித்தான பல கிராமங்கள் இருந்தன. அவற்றில் ஒன்றான பத்தாவேல எனும் கிராமத்திலேயே, அலுத்னுவர தேவாலயம் கட்டப்பட்டது.

## தீராத நோய்

1258இல் இரண்டாம் பராக்கிரமபாகு மன்னனுக்கு தீராத நோய் ஒன்று ஏற்பட்டது. இதனால் வாய் பேசமுடியாத நிலை அவருக்கு ஏற்பட்டது. நாட்டின் மிகத் திறமையான வைத்தியரிடம் சிகிச்சை பெற்ற போதிலும் நோய் தீரவில்லை. இதன் காரணமாக, மன்னனின் பட்டத்து ராணியாகிய கிருவசதேவி, தெவினுவர விஷ்ணு தெய்வத்திற்கு காணிக்கை வைத்து மன்னன் சுகம் பெறப் பிரார்த்தித்தாள். அன்றிரவே விஷ்ணு தெய்வம் கனவில் தோன்றி, மாயரட்டையில் உள்ள ராணிக்குரிய கிராமங்களில் வாழும் மக்களுக்கு, தேவினுவரவிற்கு வந்து, பெரஹர நடவடிக்கைகளை மேற்கொள்ள, சிரமமாய் இருப்பதால், பத்தாவெலயில் விஷ்ணுவின் பெயரால், தேவாலயம் ஒன்றைக் கட்டும்படி, கேட்டதாக, வாய்மொழிக் கதைகள் குறிப்பிடுகின்றன.






## பத்தாவெல

இக்கட்டுமானப் பணியை, அஸ்ஸத்தனா பிரிவேனையின் தெரசாமி என்பவரின் வழிகாட்டலில், செய்யும்படியும் கனவில் தெரிவிக்கப்பட்டது. அதுமட்டுமல்லாது, பத்தாவெலையில் தெரசாமிக்கும் விஷ்ணு தெய்வம் கனவில் தோன்றி, ஆலயத்திற்கான இடத்தைக் காட்டியது. இதனை அறிந்த மன்னன், பத்தவெலையை 'நவ திலக புர' எனும் புதிய நகரமாக மாற்றியமைத்தான். அதன்பின் தேவினுவர விஷ்ணுவின் சிலையையும் தேவ ஆபரணங்களையும் ஊர்வலமாக அழுத்னுவரவிற்கு கொண்டு சென்றனர். இதனையடுத்து, மன்னன் சுகமடைந்ததாக கூறப்படுகின்றது. அவ்வாலயத்திற்கு, வழிபாட்டிற்காக, வரும் பக்தர்களின் பயணத் தேவைகளை கருத்திற்கொண்டே கிரிவச சுனேத்ரா தேவியால் கிருவா அம்பலம் கட்டப்பட்டது என கர்ண பரம்பரைக் கதைகளும் கூறுகின்றன.

இந்த கிருவா அம்பலமானது, வாஸ்து விஞ்ஞானத்தின்படி மிக முக்கியமானது. இது பதினாறு கல் தூண்களின் மீது கட்டிஎழுப்பப்பட்டுள்ளது. இரு மர அடுக்குகளால், கூரை பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. இந்த கற்தூண், முதலாம் புவநேகபாகுவின் காலத்திற்குரியது என நம்பப்படுகின்றது.

-ரஞ்சித் ஜெயகர்





Digitized by Noolaham Foundation.

# குட்டி யானைகளின் சுட்டித்தனம்...

## உடவலவ யானைகள் சரணாலயம்



யானைக்குட்டிகளையும் சிறு பிள்ளைகளையும் பராமரிப்பது மிகவும் கடினமான பணி என்று பொதுவாக ஒரு கருத்து நிலவுகின்றது. ஆனால் யானைகள் பராமரிப்பு என்பது சலிப்பை ஏற்படுத் தாத ஒரு பணியாகும். காட்டில் உள்ள மிகப் பெரிய விலங்காகவும் பண்டைய காலம் தொட்டு மனிதருடன் ஐக்கியப்பட்டிருக்கும் விலங்குகளா கவும் யானைகள் கருதப்படுகின்றன. மேலும், யானையானது இந்து மற்றும் பௌத்த மதங் களில் கடவுளுக்கு நெருக்கமான விலங்காகவும் கருதப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

### பெயர் சூட்டல்

மேற்படி யானைகள் பாதுகாப்பு இல்லத்தின் ஆரம்ப கால உறுப்பின ராக இருந்தது "கோமளி" என்ற யானையாகும். அதற்கமைய.அன்று முதல் இன்று வரை இங்கு வரும் யானைக்குட்டி களுக்கு செல்லப் பெயர்கள் சூட்டப்படுகின்றன. இங்கு 5 முதல் 7 வரையான வயதினைக் கொண்ட யானைகள் உள்ளன.

யானைகள் எங்கிருந்து கொண்டு வரப்படுகின்றதோ அந்தப் பிரதேசத்தின் பெயரில் குட்டிகளுக்கு பெயரிடப்படுகின்றன. அந்தவகையில், மீகலவென்ன பகுதியிலிருந்து கொண்டு வரப்பட்ட யானைக்குட்டியின் பெயர் மீகாராய, அம்பாறை நாமல் ஒயவிலிருந்து வந்த யானைக்கு ட்டிக்கு பெயர் நாமல். இதனால் இங்குள்ள யானைக் குட்டிகளை இனம் காண்பது இலகுவான விடயமாகும்.

### பெற்றோரை இழந்த யானைக்குட்டிகள்

மனிதர்களுடன் நெருக்கமாக இருக்கும் யானை களை பெரஹெர மற்றும் தேசிய சரணாலயங் களில் காண முடியும். அவ்வாறான இடங்களுக்கு சென்று யானைகளைப் பார்வையிட நாம் அனைவரும் விரும்புவது இயல்பானதே. இவற்றுள் யானைகளின் சுட்டித் தனமான செயற்பாடுகளைக் கண்டு களிப்பதற்கு சிறந்த இடமாக உடவளவ யானைகள் சரணாலயத் தினை குறிப்பிட முடியும்.

1995 இல் இந்த நிலையம் யானைகள் புனர்வாழ்வு நிலையமாக மாற்றம் பெற்றது. இயற்கை அனர்த்தங்கள், மனித செயற்பாடுகள் காரணமாக, அன்னையின் அரவணைப்பினை இழந்து அநாதைகளாக்கப்பட்ட குட்டி யானை களைப் பராமரிப்பதே, இந்த நிலையத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

இற்றைக்கு பல தசாப்தங்களுக்கு முன்னர் காட்டு யானைகளைப் பிடித்தல் மற்றும் அவற்றைக் கட்டுப்படுத்தி வளர்த்தல் என்பன சட்டரீதியான விடயங்களாக இருந்துள்ளன. அரசின் விசேட அனுமதியுடன் காட்டு யானைகளைப் பிடித்து மனித தேவைகளுக் காக வளர்க்க முடிந்தது. எனினும், 1970 ஆம் ஆண்டுகளின் ஆரம்ப காலப்பகுதியில் காட்டு யானைகளைப் பிடிப்பது அரசாங்கத் தினால் தடை செய்யப்பட்டது. இதற்கமைய, யானைகளைப் பாதுகாக்கவென வனஜீவிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் யானைகள் பாதுகாப்பு நிலையம் ஒன்று உருவாக்கப்பட்டது.







### பார்வையிடக்கூடிய சந்தர்ப்பம்

இப்பராமரிப்பு நிலையத்தில் உள்ள யானைகள் ஒரு கால அட்டவணைக்கு ஏற்ப தம்மை தகவமைத்துக் கொண்டுள் ளன. காலை 6 மணி, காலை 9 மணி, நண்பகல் 12, மாலை 3 மற்றும் 6 மணி ஆகிய நேரங்களில் இவற்றிற்கு பால் வழங்கப்படுகின்றது. இந்த சந்தர்ப்பத்தின்போது இவற்றை உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் கண்டுகளிக்க முடியும். இந்த சந்தர்ப்பம் மிகவும் மகிழ்ச்சிகரமானது. யானைக்குட்டிகளின் செயற்பாடுகளும் குறும்புகளும் மிக மிக ரம்மியமாக இருக்கும். பால் ஊட்டுவதை இலகுவாக்க இரண்டு குட்டிகள் வீதம் கூட்டத்திலிருந்து தனிமைப்படுத் தப்படுகின்றன. ஒரு சில குட்டிகள் அதிகம் பால் கேட்டு சுட்டித்தனம் செய்யும். அவை பால் பருக்கும் குழாயை தும்பிக்கையினால் பிடித்துக்கொண்டு இன்னுமின்னும் பால் கேட்டு தொந்தரவு செய்யும். இந்த காட்சிகளைப் பார்ப்பதற்கு சுற்றுலாப் பயணிகள் மிகவும் ஆர்வத்துடன் இங்கு அணி திரள்கின்றனர்.

தற்போது இங்குள்ள யானைக்குட்டிகளில் 'மோசஸ்' என்ற யானைக்குட்டி மிகவும் சுட்டித்தனம் மிக்கது. பால் அருந்துவதற்கு தனக்கான வாய்ப்பு வரும் வரை அதனால் பொறுத்துக் கொள்ளவே முடியாது. 'சூட்டி மெனிக்கே'யும் அப்படித்தான். ஆனால் அது ஊழியர்களின் பேச்சைக் கேட்கும். 'அம்பாற' யானை குட்டி கொஞ்சம் குழப்படி. ஊழியர்கள் குச்சியைக் காட்டியே அதனைக் கட்டுப்படுத்து கின்றனர்.



இவ்வாறான சிறப்பான அழகிய காட்சிகளைக் கொண்ட யானைகள் இல்லம் பார்ப்பதற்கு மிகச் சிறந்த ரம்மியமான இடமாகும். மேலும் இங்குள்ள குட்டிகளின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் குறித்தும் அதிகம் கவனம் செலுத்தப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரம் சித்தியடைந்தவர்களுக்கு தொழில்முறை இரசாயனவியலாளராவதற்கான சிறந்த வாய்ப்பு

க.பொ.த. உ/தரத்தை நிறைவு செய்த அல்லது உயர்தரத்தை கற்கவுள்ள இரசாயனவியலை ஒரு பாடமாகக் கொண்ட மாணவர்கள் தொழில்முறை இரசாயனவியல் கற்கை நெறியை மேற்கொள்வதற்கான வாய்ப்பை இலங்கை இரசாயனவியல் நிறுவனம் வழங்கவுள்ளதாக அறிய வருகின்றது.

இலங்கை இரசாயனவியல் நிறுவனமானது 1972 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க நாடாளுமன்ற சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டு 1979 ஆம் ஆண்டு முதல் இரசாயனவியலில் பட்டக் கற்கைநெறிகளை வழங்கிவரும் ஒரு நிறுவனமாகும். நான்கு வருடங்களைக்கொண்ட இந்த கற்கைநெறியானது, இலங்கையின் எந்தவொரு அரச பல்கலைக்கழகத்தினாலும் வழங்கப்படும் இரசாயனவியல் சிறப்புப் பட்டத்திற்கு ஒப்பானதாகும்.

அத்துடன், இது ஐக்கிய ராச்சியத்தின் **Royal Society of Chemistry** இன் அங்கீகாரம் பெற்ற இலங்கையின்



ஒரே ஒரு இரசாயனவியல் கற்கைநெறி என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கை இரசாயனவியல் நிறுவனத்தில் தமது உயர்கல்வியை திறம்பட நிறைவு செய்யும் மாணவர்களால் **M.Sc, M. Phil, or Ph D** போன்ற மேற்கண்ட பட்டப் பின் கற்கைகளை எந்தவொரு உள்நாட்டு வெளிநாட்டு பல்கலைக்கழகத்திலும் தொடர முடியும்.

இக்கற்கைநெறியானது (ஜனவரி) ஆரம்பிக் கப்படவுள்ளது. தமது கற்கைநெறியை முழுமையாக பூர்த்தி செய்யும் மாணவர்கள் 2021 ஆம் ஆண்டின் ஒக்டோபரில் தமது பட்டத்தினைப் பெற்றுக்கொள்ள முடியும். ஏற்கனவே, உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் மீண்டுமொருமுறை பரீட்சைக்குத் தோற்றி, தமது நேரம், பணம் மற்றும் சக்தியை வீணடிப்பதைவிட இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக்கொள்வதன்மூலம் ஒரு சிறந்த திறன்மிக்க பட்டதாரியாக உருவாகும் வாய்ப்புக் கிட்டியுள்ளது. அத்துடன், இலங்கை இரசாயனவியல் நிறுவனத்தில் தமது முதல் இரண்டு ஆண்டு கற்கைநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்யும் மாணவர்கள் தமது மூன்றாம் ஆண்டு கல்வியை ஐக்கிய ராச்சியத்தின் Northumbria **University UK** இல் தொடர்ந்து பிரயோக இரசாயனவியலில் விஞ்ஞானமாணி **B.Sc.(Hons) degree in Applied Chemistry** பட்டத்தினை பெற்றுக்கொள்ளவும் முடியும். அவ்வாறே, மேலும் இரண்டு வருடகால கல்வியை அந்தந்த நாடுகளில் தொடர்வதன்மூலம் ஐக்கிய அமெரிக்காவின் **University of Cincinnati, Truman State University** மற்றும் அவுஸ்திரேலியாவின் **Deakin University** ஆகிய பல்கலைக்கழகங்களின் விஞ்ஞானமாணி பட்டத்தினை பெற்றுக்கொள்ளவும் முடியும்.

இந்த கற்கைநெறி தொடர்பான மேலதிக விபரங்களை www.ichemc.edu.lk என்ற வலைத்தளத்திலோ அல்லது 2861231/ 2861653 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாகவோ தொடர்புகொண்டு அறியலாம்.

என்.ஐ.என்.எஸ்.நடராசா

# ஆர்ஜென்டினா




தென் அமெரிக்காவில் அமைந்துள்ள ஆர்ஜென்டினா நாடு அவ்வலயத்திலேயே இரண்டாவது மிகப் பெரிய நாடாகும். 1580 முதல் ஸ்பானியரின் ஆதிக்கத்தின்கீழ் வந்த பின் அங்கு வாழ்ந்த சுதேசிகள் பெருந்துயரங்களுக்கு முகம் கொடுத்தனர். அரசியல் மோதல்கள் நிகழ்ந்த அந்நாட்டில் இன்றைய அரசியலமைப்புமுறை 1853 மே மாதம் 1 ஆம் திகதி முதல் நடைமுறையில் உள்ளது.












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன்?

**கேள்வி:** மக்கள் நடமாட்டம் உள்ள பகுதிகளில் விமான நிலையங்களை அமைப்பது பொருத்தமற்றது என்று கூறப்படுவது ஏன்?

**பதில்:** விமானங்கள் பயணத்தினை ஆரம்பிக்கும் போதும் தரையிறங்கும் போதும் அவற்றின் இயந்திரங்களில் இருந்து வெளியாகும் அதிக இரைச்சல் மனிதனின் செவிகளுக்கும் ஆரோக்கியத்திற்கும் பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. பயணிகள் மற்றும் விமானப் பணியாளர்கள் போன்றன்றி சுற்றுப் புறங்களில் வசிப்பவர்கள் அடிக்கடி இந்த சூழல் மாசடைவினை எதிர்கொள்கின்றனர். இவ்வாறான சுற்றாடல் மனித வாழ்வுக்கு பொருத்தமற்றது; இதனாலேயே, மக்கள் நடமாட்டம் உள்ள பகுதிகளில் விமான நிலையங்கள் அமைக்கப்படுவது தவிர்க்கப்படுகின்றது.



# சர்க்கரையின் வகைகள்



தேனின் அதிகமான இனிப்பிற்குக் காரணம் அதில் உள்ள 'ஃபிரக்டோஸ்' எனப்படும் சர்க்கரைதான். சர்க்கரையில் பலவகைகள் உள்ளன. கரும்பில் 'சுக்ரோஸ்' எனப்படும் சர்க்கரை உள்ளது. இதை 'இன்வெர்டேஸ்' என்கிற நொதியத்தால் சிதைத்தால் குளுக்கோஸ், 'ஃபிரக்டோஸ்' என்ற இரு சிறு சர்க்கரைப் பொருட்கள் கிடைக்கும். இவற்றில் ஃபிரக்டோஸ், எல்லாவிதமான பழங்களிலும் இருக்கிறது. இந்த ஃபிரக்டோஸ்தான் பழங்களின் அதியற்புதமான சுவைக்கு காரணம். பூவிலுள்ள தேனிலும் இந்த ஃபிரக்டோஸ்தான் நிரம்பி உள்ளது. இதனால்தான் தேனிலும் பாதிக்குப்பாதி ஃபிரக்டோஸ் இருக்கிறது. இதன்மூலமே தேன் இனிப்புச் சுவையுடன் உள்ளது.



# வாரம் ஒரு பறவை




## சிறுமீன் கொத்தி
## *(Small Blue Kingfisher)*

மீன்கொத்தி என்ற பெயரில் பல்வேறு இனங்கள் இருப்பினும், இலங்கையில் காணப்படும் சிறுமீன்கொத்தி பற்றிய தகவல்கள் தரப்படுகின்றன. பெரிய மீன்கொத்தியின் பருமனில் மூன்றில் ஒரு பங்கு அளவில் உள்ள இந்தப்



பறவை பல வர்ண, மினுமினுப்பான இறக்கைகளைக் கொண்ட அழகான பறவையாகும். பெரும்பாலும் நீல நிறமான இப்பறவையின் மார்பும், வயிறும் கபில நிறமாக இருக்கும். இதன் அலகு கறுப்பாக இருக்கும். சிறு நண்டுகள், பூச்சிகள், மீன்கள் இதன் பிரதான உணவாகும். நீரின் உள்ளே உள்ள இரையை காணும் வகையில் இதன் கண்கள் கூர்ப்படைந்துள்ளன. இதனால், நீரில் சுழியோடி இரையைக் கௌவ முடிகின்றது. ஆற்றங்கரைகளில், மண் திட்டுகளில் அல்லது பெரிய கிடங்குகளில் 50 சென்ரிமீற்றர் தொடக்கம் 75 சென்ரிமீற்றர் வரை நீளமான பொந்து அமைத்து முட்டையிடும். மனிதரைக் கண்டால் பறந்து மறைந்துவிடும்.

**அடுத்த வாரம்...!**
பச்சைச் சிட்டு


புதிய தொடர்கதை

விரைவில்...!



விண்வெளி வாசல்

நவீன விஞ்ஞானமும் புராதன மர்மங்களும் கலந்த

21 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் நடைபெறும் ஒரு துப்பறிவு தேடல்...

ஒரு பெரும்புள்ளியின் ரகசியம் திருடப்படுகின்றது....

இதனை தேடி விரைகின்றது மாணவர் குழுவொன்று....

இவர்களுடன் ஒரு நவீன ரோபோவும் ஒரு விஞ்ஞானியும் கைகோர்க்கின்றனர்....

மர்மம் துலங்கியதா...?

விடை தருகிறது

விண்வெளி வாசல்

வாசிக்கத் தயாராகுங்கள்...!


# நட்சத்திர மீன்



'நட்சத்திர மீன்' என்ற கடல் பிராணியின் உடல் பாகங்கள் சேதம் அடைந்தால் அது மறுபடியும் வளர்ந்துவிடுகின்றதாம். அந்தவகையில், இதன் உடலிலிருந்து பிரிந்த பகுதி, இன்னொரு நட்சத்திர மீனாக உருவாகின்றது. இதற்கு மிகவும் பிடித்த உணவு, 'சிப்பி மீன்கள்' ஆகும். இந்த மீன்களை, நட்சத்திர மீன் பிடித்து உண்டு எளிதில் அவை ஜீரணித்துவிடுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறைந்தது நயகரா



நயகரா நீர்வீழ்ச்சியின் தற்போதைய தோற்றம்

ஐக்கிய அமெரிக்காவுக்கும் கெனடாவுக்கும் இடையேதான் நயகரா நீர்வீழ்ச்சி அமைந்துள்ளது. தற்போதளவில் அமெரிக்கா மற்றும் கெனடாவில் நிலவும் கடும் குளிர் காரணமாக, நயகரா நீர்வீழ்ச்சியின் ஒரு பகுதி பனியினால் உறைந்து போயுள்ளது!

இதனால், அப்பகுதி மிகவும் அழகாக காட்சியளிக்கின்றது. இந்த அழகைக் கண்டு களிப்பதற்கு தினமும் ஏராளமான சுற்றுலாப்பயணிகள் அப்பகுதிக்கு வருகை தந்தவண்ணமுள்ளனர்.

'உலகின் அகலமான நீர்வீழ்ச்சி' எனப் புகழ்பெற்றுள்ள நயகரா நீர்வீழ்ச்சியைக் கண்டுகொள்வதற்கு வருடம்தோறும் சுமார் 30 மில்லியன் சுற்றுலாப்பயணிகள் இந்த நாடுகளுக்கு வருகை தருவதாக கணக்கிடப்பட்டுள்ளது. எனினும், தற்போதளவில் பனியினால் உறைந்து போயுள்ள நயகராவைக் கண்டுகளிப்பதற்கு வழமையைவிட ஏராளமான சுற்றுலாப்பயணிகள் அங்கு வருகின்றமையினால், இந்த முறை அந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என தகவல்கள் தெரிவிக்கின்றன.



நயகரா நீர்வீழ்ச்சியின் வழமையான தோற்றம்






கி.மு. 45 ஆம் ஆண்டளவில் ஜூலியன் நாட்காட்டியின்படி, Ianuarius என பெயரிடப் பட்டிருந்த ஜனவரி மாத முதலாம் திகதி புத்தாண்டாக கொண்டாடப்பட்டது. அத்தினத்தை முதன்முதலில் புத்தாண்டாக அறிவித்தவர் ஜூலியஸ் சீசர் ஆவார். அதன் பின்னர் க்றெகரியன் நாட்காட்டி பாவனைக்கு வந்தபோதும்கூட, ஜனவரி முதலாம் திகதியே புத்தாண்டாக கொண்டாடப்படுகின்றது.


# அதிக உடல் வெப்பம் கூடாது!



கடும் வெயில் நேரத்தில் வெளியே செல்வதனாலும் கடுமையான உடல் உழைப்பின்போதும் சுற்றாடலில் அதிக வெப்பம் நிலவும்போதும் எமது உடல் அதிகளவு வெப்பமடைகின்றது. எனினும், எமது உடல் அதிகம் வெப்பமடையக் கூடாது என மருத்துவர்கள் கூறுகின்றனர். உடல் அதிகம் வெப்பமடைவதனால் 'வெப்பத்தாக்கம்' (Heatstroke) ஏற்படலாம் என அவர்கள் எச்சரிக்கின்றனர்.

மனிதனின் சாதாரண உடல் வெப்பநிலை 37° செல்சியஸ் ஆகும். ஆனால், இந்த வெப்பநிலை 40° செல்சியஸ் ஆகவோ அல்லது அதனைவிடவும் அதிகரிக்கும் பட்சத்திலோ இத்தகைய பாதிப்புகள் ஏற்படலாம். உடலானது, அதிகளவு வெப்பமடைவதைத் தடுப்பதற்காகத்தான் எமது உடலில் இருந்து வியர்வை வெளியேற்றப்பட்டு, உடல் வெப்பநிலை பேணப்படுகின்றது.

பசுபிக் சமுத்திரத்தில் அமைந்துள்ள டொங்கா, சமோவா, கிரிபாடி ஆகிய தீவுகளே உலகில் முதன்முதலில் புத்தாண்டு பிறக்கும் இடங்கள் என்ற சிறப்பை பெற்றுள்ளன. அவ்வாறே, உலகில் கடைசியாக புத்தாண்டு பிறக்கும் இடங்களாக பேக்கர் தீவு மற்றும் ஹோவ்லண்ட் தீவு என்பன திகழ்கின்றன.






பூனையின் உடலில் காணப்படும் மொத்த எலும்புகளில் சுமார் 10 சதவீதமான எலும்புகள் அதன் வால் பகுதியில்தான் உள்ளன.

இப்பத்திரிகை கொழும்பு -2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2018, ஜனவரி 10 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday January 10, 2018.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org